# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 68 பக்கங்கள் : 16





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


## மன்னார் மறைமாவட்ட ஆயருடன் சிறீதரன் எம்.பி. முக்கிய சந்திப்பு

மன்னார், மார்ச் 15

மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய பேரருட் கலாநிதி ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்துச் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும், சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின் போது வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## உள்ளூர் உற்பத்திகள் இனி யாழிலிருந்து நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி!

### சுங்க திணைக்களம் ஊடாக ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 15

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சந்தைப்படுத்தல் சவால்களுக்குத் தீர்வுகாணும் வகையில், உள்ளூர் உற்பத்திகளை யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாகப்

புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒழுங்குகளை இலங்கைச் சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுத்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள புனிதப் பிரதேசமான திருமுறிகண்டியில், "அரியாத்தை பாரம்பரிய சைவ உணவகம்" மற்றும் முல்லைத்தீவு உற்பத்திகளின் விற்பனை நிலையமான "மேட் இன் முல்லைத்தீவு" ஆகிய இரு நிலையங்களையும் நேற்று சனிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

15



## 3 முதல் 5 வயதுப் பிள்ளைகளுக்கு நிகழ்நிலை வகுப்புகள் வேண்டாம்!

### சிறுவர் விவகார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

நிகழ்நிலை - இணையக் கற்பித்தல் முறை இளம் பிள்ளைகளின் ஆற்றலை மழுங்கடிப்பதுடன், கல்வி உளவியலுக்கும் சிறுவர் அபிவிருத்திக் கொள்கைகளுக்கும் முற்றிலும் முரணானது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

டிஜிற்றல் திரைகள் வழியாகக் கற்பது சிறுவர்களின் கவனம் செலுத்தும் திறன், சமூகத்

15

## மின்சார மாபியாவுக்கு தீனி போடுகிறது அரசு!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 15

தற்போதைய அரசு முன்னெடுக்கும் தரமற்ற நிலக்கரி ஊழலானது, நாட்டில் நிலவும் எரிபொருள் மின்நிலைய மாபியாவை மேலும் வலுப்படுத்துமே ஒழிய வேறொன்றுமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15

## நாணய நிதியப் பிரதிநிதிகள் குழு இந்த மாத இறுதியில் இலங்கைக்கு!

கொழும்பு, மார்ச் 15

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

நாட்டின் பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இந்த விஜயம் அமையவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னா ண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் விரிவாக்

15

## எதிர்க்கட்சிகளை ஒடுக்க ரணில் மீது அடக்குமுறை!



### ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

கொழும்பு, மார்ச் 15

எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக தற்போதைய அரசு முன்னெடுக்கும் அடக்குமுறைத் திட்டத்தின் பிரதான இலக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாற்றப்பட்டுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலின் பேரில், நாடு தழுவிய ரீதியில்

15

### எரிசக்தி நெருக்கடி:

## அரச ஊழியர்களுக்கு "வீட்டிலிருந்து வேலை"?

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் நிலவும் எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக, அரச துறையின் குறிப்பிட்ட சில ஊழியர்களை மீண்டும் வீட்டிலிருந்தே பணியாற்றும் நடைமுறைக்கு உட்படுத் துவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகி ன்றது.

இது தொடர்பாக அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சுமன ஆலோக்க பண்டாரவிடம் வினவியபோது, பல்வேறு தரப்பினரிடமிருந்தும் இது குறித்த ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தினார்.

எரிசக்தி நெருக்கடி ஏற்படும் காலங்களில் உலகின் பல நாடுகளும் இத்தகைய வேலைத்திட்டங்களைச் செயல்படுத்துவது வழமையாகும்.

15

## போதை மாத்திரை நுகர்ந்த சமயம் பிடிபட்ட சுத்திகரிப்புப் பணியாளர்!

### பல்கலை ஊழியர்களால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள் தடை செய்யப்பட்ட போதை பொருளை நுகர்ந்த வேளையில் கையுங் களவுமாக மடக்கிப் பிடிக்கப்பட்ட தனியார் சுத்திகரிப்புச் சேவைப் பணியாளர் ஒருவர் யாழ். பல்கலைக்கழகப் பாதுகாப்பு ஊழியர்களால் கோப்பாய் பொலிஸாரிடம்

15

## ஈரானிய வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் விஜித ஹேரத் கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 15

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் செய்யத் அப்பாஸ் அராக்சி மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கிடையில் விசேட தொலைபேசி உரையாடலொன்று இடம்பெற்றது.

பிராந்திய ரீதியிலான அண்மைக்கால முன்னேற்றங்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முன்னெடுத்த இராணுவத் தாக்குதல்களைத்

15

## யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையின் முன்னாள் தலைவர் நவரத்தினம் மறைவு!



யாழ்ப்பாணம். மார்ச் 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட இசைத்துறையின் முன்னாள் தலைவர் சங்கீதபூசணம் கலாநிதி ந.வி. மு.நவரத்தினம் தனது 75ஆவது வயதில் நேற்று காலமானார்.

யாழ். பல்கலைக்கழக

15

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்

## லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்

கொழும்பு, மார்ச். 15

இலங்கையின் வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும், அதற்காக எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து தெரிவித்த அந்த நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கே. ரகு இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் என்ற ரீதியில், எரிபொருள் விநியோகத்தை நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்போம் என்பதை மக்களுக்கு கூற விரும்புகிறேன். நாட்டுக்கு மிகவும் அவசியமான வலுசக்தி பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

தற்போதைய நிலைமை மிகவும் சிறப்பாக இருப்பதாக நான் கூறவில்லை. எவ்வாறாயினும், நாட்டுக்குள் எரிபொருள் விநியோகத்தை சீராகப் பேணுவதற்காக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் அரசாங்கமும் தங்களால் இயன்ற உச்சகட்ட முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்காக நாங்கள் தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிப்போம்" - என்றார். (எ)

# போதை ஒழிப்பு நடவடிக்கைக்கு வடமராட்சியில் குழு அமைப்பு

கொழும்பு, மார்ச். 15

ஜனாதிபதியின் முழு நாடுமே ஒன்றாக எனும் தேசிய செயல்பாட்டுக்கு இணைந்த வகையில் விஷ போதைப்பொருளை தடுப்பதற்கான கிராம மட்ட குழு ஒன்று நேற்று முன்தினம் வடமராட்சி புலோலியில் அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி வட்டார உறுப்பினர் ரமணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 6ஆம் வட்டாரமான புலோலி வட்டாரத்தின் ஜே- 408 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் போதைப் பொருள் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் நந்தகுமார், கிராம உத்தியோகத்தர் ரங்கநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர் சியாமளா, சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் திவ்யா, பருத்தித்துறை போலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் புத்திக குமார மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் விதுஷன் ஆகியோர் விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கியதுடன் போதை ஒழிப்பு குழுவின் செயல்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர். (எ-08)



சித்தங்கேணி சிறீகணேசா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

# போக்குவரத்து உப குழுக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச். 15

யாழ்ப்பாணம் மாவட்ட போக்குவரத்து உப குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாணம் மாவட்ட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான க. இளங்குமரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன், நகர- பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். சோதிநாதன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். சிறி வாகீசன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும் யாழ். மாநகர சபையின் உறுப்பினருமான எஸ். கபிலன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது, தலைமையுரையாற்றிய இளங்குமரன் எம்.பி., கடந்த வருடம் 250 மில்லியன் ரூபாய் மற்றும் 1000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்கள், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் சிசுசரிய - பாடசாலை பேருந்துச் சேவை, கெமி செரிய - கிராமிய இணைப்பு பேருந்து சேவை, நிசி செரிய - பின்னிரவு பேருந்து சேவை மற்றும் கடல் வழிப் போக்குவரத்து ஆகியன தொடர்பில் விரிவாக ஆராந்து, அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தின் அபிவிருத்திக்கு தமது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (எ)



யாழ். கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை பதில் அதிபர் சி. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

# சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!



யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் துறை, பல்துறைக் கற்கைகள் துறை ஆகிய துறைகளின் துறைத் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஜசோதா பிரபாகர், பொறியியல் பீடத்தின் பல்துறைக் கற்கைகள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பத்மநாதன் கதிர்காமநாதன் மற்றும் கலைப் பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு கருணாகரன் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஜசோதா பிரபாகர் இரசாயனவியலில் பேராசிரியராகவும், பொறியியல் பீடத்தின் பல்துறைக் கற்கைகள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பத்மநாதன் கதிர்காமநாதன் பொறியியற் கணிதவியலில் பேராசிரியராகவும், ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு கருணாகரன் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 768 விமான பயணங்கள் இரத்து

# சுற்றுலா பயணிகளின் வருகை திடீரென 30 சதவீதம் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச். 15
மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, நாட்டுக்கு வருகை தரவிருந்த 768 விமானப் பயணங்கள் இதுவரையில் இரத்து செய்யப்பட்டன என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சுமார் 30 சதவீதம் வீழ்ச்சி காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாராளுமன்ற உறுப்பினரையே கட்டுப்படுத்த முடியாத ஆளுநர்

### தவிசாளரை குறை கூறுவது விந்தையானது

யாழ்ப்பாணம், மார்ச். 15
பாராளுமன்ற உறுப்பினரையே கட்டுப்படுத்த முடியாத ஆளுநர், தவிசாளரை குறை கூறுவது விந்தையானது என்று சட்டத்தரணி கு. குருபரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகியோருக்கு எதிராக வட மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணை குழு நேற்று முன்தினம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் நகர சபைச் செயலாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணையின் முக்கிய அம்சமாக, இரண்டாம் குற்றம்சாட்டப்பட்டவரான உப தவிசாளர் ஞா. கிஷோர் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் முன்னிலையாகி வாதாடினார். கடந்த ஜனவரி 20ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில், 50 ஆண்டுகளுக்கும் மேலான பழைய கட்டடங்களுக்கு 'தகுதிச் சான்றிதழ்' கோருவது குறித்து உப தவிசாளர் விமர்சித்திருந்தார். இந்த உரை உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலை மீறிய செயல் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலேயே வாதங்கள் அமைந்தன.

உப தவிசாளரின் உரை குறித்து வாதாடிய சட்டத்தரணி குருபரன், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார வரம்புக்கு உட்பட்ட விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு முழு உரிமை உண்டு எனச் சுட்டிக்காட்டினார். வர்த்தக உரிம வரி மற்றும் அது சார்ந்த துணை விதிகளை உருவாக்கும் அதிகாரம் சபைக்கு உள்ள நிலையில், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் நலன் சார்ந்து பேசுவது ஒரு உறுப்பினரின் கடமையாகும். உப தவிசாளர் எந்தவொரு அதிகாரியையும் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை என்றும், பொதுக் கொள்கைகளைச் சரியான திசைக்குக் கொண்டு செல்லவே அவர் முயன்றார் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-05)

# எதிர்க்கட்சிகள் இணைந்து ஆவணம் ஒன்று தயாரிப்பு

கொழும்பு, மார்ச். 15
எதிர்க்கட்சிகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகளைக் கொண்ட 'மக்கள் குரல்' அமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர், சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீரவை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு சர்வஜன அதிகாரத்தின் பிரதான காரியாலயத்தில் நடைபெற்றது.

நாட்டில் பல நெருக்கடிகள் தலைதூக்கியுள்ள இக்காலகட்டத்தில், எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வலுசக்தி நெருக்கடி, மத்திய கிழக்கு போர் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டு, பொதுவான வேலைத்திட்டத்துக்காக எதிர்க்கட்சிகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் பொதுவான இணக்கப்பாட்டை எட்ட எதிர்பார்ப்பதாகவும் ஜி. எல். பீரிஸ் கூறினார். (எ)

# மன்னாரில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, மார்ச். 15
மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக மழையற்ற வானிலை நிலவும். மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)

## சாமரவின் மனைவியின் சொகுசு வீடு முடக்கம்

கொழும்பு, மார்ச். 15
கொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய சகாவும், தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள 'பட்டுவத்த சாமர' என்ற மனோஜ் சுரங்க என்பவரின் மனைவியின் பெயரில் ஜா-எல, வெலிகம்பிட்டிய பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 4 கோடி ரூபாய் பெறுமதியான மூன்று மாடி வீட்டை 7 நாட்களுக்கு தடை செய்வதற்கு சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

பட்டுவத்த சாமர என்பவர் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த பணத்தில் இந்த வீட்டை கொள்வனவு செய்ததாக நம்பத்தகுந்த தகவல்கள் வெளியானதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டை இரண்டு மாதங்களுக்கு முன்பு மற்றொரு தரப்பினர் வாடகைக்கு எடுத்து முதியோர் இல்லம் ஒன்றை நடத்தி வந்துள்ளனர். அங்கு தங்கியிருந்த 9 முதியவர்களும் 4 தாதியர்களும் அவ்விடத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

பட்டுவத்த சாமரவின் மனைவியான சதுரிக்கா வீரசூரிய இதற்கு முன்னர் இந்த வீட்டில் வசித்து வந்த நிலையில், மூன்று சந்தர்ப்பங்களில் இந்த வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின.

இறுதியாக கடந்த 7ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 586 பேர் கைது

கொழும்பு, மார்ச். 15
நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 586 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 27,726 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 12 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 295 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 176 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 266 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 59 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,682 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவன் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச். 15
கொக்குவில் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட மாணவன் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது.

இதன்போது உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவனை மைதானத்துக்குள் நுழைந்த ஒரு குழுவினர் பலரும் பார்த்திருக்க தாக்கிய நிலையில் தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு விளம்பரம் செய்ய வேண்டும்

கொழும்பு, மார்ச். 15
எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரம் வெளியிட வேண்டிய நிலைமை காணப்படுகிறது. நாட்டில் பல தீவிர பிரச்னைகள் காணப்படுகின்ற நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஈரான் போர்க்கப்பலை தாக்கிய நீர்மூழ்கிக் கப்பலின் ரகத்தை ஆராய்கிறார் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரமடைந்துள்ள மோதலுக்கு மத்தியில் தேசிய மட்டத்தில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்பது சந்தேகத்துக்குரியது.

தற்போதைய நெருக்கடியான நிலையில் தான் எண்ணெய் கிணறு உரிமையாளரல்ல என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இது அவரது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது. சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிக்கும் எண்ணெய் கிணறுகள் இருக்கவில்லை.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துகிறது. அரசியல் பழிவாங்கலுக்காக புலனாய்வுப் பிரிவினர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். இது முற்றிலும் தவறானது." - என்றார். (எ)

# சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச். 15
கடுவெல - வெலிவிட்ட பகுதியில் சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் பெருமளவிலான தோட்டாக்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து, போர் துப்பாக்கி, ரைபிள் துப்பாக்கி, 15 போர் தோட்டாக்கள், 02 ரைபிள் தோட்டாக்கள், மகசின், 50 - 7.62 மில்லிமீற்றர் ரக தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு போர்ச் சூழலால் ஏற்றுமதி துறைக்கு கடும் பாதிப்பு

கொழும்பு,மார்ச். 15

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர் நிலைமையால் நாட்டின் ஏற்றுமதித் துறையிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

மொத்த ஏற்றுமதியில் சுமார் 8 சதவீதத்தை மத்திய கிழக்கு பிராந்தியம் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அதன் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

இந்த நெருக்கடி மேலும் தீவிரமடைந்தால், ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் 35 சதவீத தேயிலையை வேறு நாடுகளுக்கு திசைதிருப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (எ)

## போதைப்பொருள், ஆயுதங்களுடன் கைதான 10 பேருக்கும் தடுப்பு காவல்

கொழும்பு, மார்ச். 15

தென் கடற்பரப்பில் நெடுநாள் மீன்பிடி படகு ஒன்றிலிருந்து போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 சந்தேகநபர்களையும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பின்னர், அவர்களை 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

ஆழ்கடலில் போதைப்பொருள் மற்றும் துப்பாக்கிகளுடன் 05 சந்தேகநபர்கள் பயணித்த ஒரு மீன்பிடி படகையும், அதற்கு இணையாக மேலும் 05 சந்தேகநபர்களுடன் பயணித்த மற்றொரு மீன்பிடி படகையும் கடற்படையினர் பொறுப்பேற்று திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு வந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 176 கிலோ 568 கிராம் ஹெரோயின், 478 கிலோ 326 கிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவற்றை வைத்திருந்தமை, இறக்குமதி செய்தமை மற்றும் கடத்தியமை, அத்துடன் 8 பிஸ்டல்கள், 15 மகசின்கள், 2 ரி-56 ரக துப்பாக்கிகள், ஒரு எம்-16 ரக துப்பாக்கி மற்றும் அதன் 04 மகசின்களை இறக்குமதி செய்தமை மற்றும் கைவசம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட சுமார் 654 கிலோ கிராம் போதைப்பொருள் தொகுதியின் பெறுமதி 10 பில்லியன் ரூபாய்க்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும்

### மகளிர் அமைப்புகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச். 15

இலங்கையில் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் சமமான சமூக சூழலை உருவாக்க வேண்டும் என்று பெண்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

சூழல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தியை வலுவூட்டும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் சமூக மட்டத்தில் சேவைகளை வழங்கிவரும் அமைப்புகளின் பெண் பிரதிநிதிகளை அழைத்து மகளிர் தின கலந்துரையாடல் நடைபெற்றது.

உரிமைகள் - நீதி - செயல் என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அங்கவீனமான பெண்கள் அவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் நில ஆக்கிரமிப்பினால் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், நுண்நிதி கடனினால் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அரசாங்கம் கொண்டுவரும் திட்டங்களால் பாதிக்கப்படும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (எ)

## “எரிபொருட்களுக்கான வரியை நீக்கி மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்”

கொழும்பு, மார்ச். 15

எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களுக்கு சுமக்க முடியாத சுமையாக மாறியுள்ளது. அதனால் அரசாங்கம் எரிபொருட்களுக்காக அறவிடப்படும் வரியை நீக்கி அல்லது குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்த அரசாங்கமும் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பெஞ்சமின் நெதன்யாஹூவின் பங்காளிகள் என மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## கார்க் தீவில் அமெரிக்கா குண்டுவீச்சு! பதிலடி கொடுக்கத் தயாராகும் ஈரான்

தெஹ்ரான், மார்ச். 15

ஈரானின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையமாக கருதப்படும் கார்க் தீவு மீது அமெரிக்கா குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

கார்க் தீவிலுள்ள ஒவ்வொரு இராணுவ இலக்குகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது.

சுமார் 5 மைல் நீளம் கொண்ட இந்த சிறிய தீவு, ஈரான் கடற்கரையிலிருந்து 15 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளது.

கார்க் தீவு அந்த நாட்டின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையமாகக் கருதப்படுவதுடன், இது ஈரானின் ‘பெற்றோலிய உயிர்நாடி’ என்றும் அழைக்கப்படுகிறது.

ஈரான் தனது கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 90 சதவீதத்தை இந்தத் தீவின் மூலமே முன்னெடுக்கின்றது.

அத்துடன், ஈரானின் மிகப்பெரிய எண்ணெய் கொள்வனவாளரான சீனா, இந்தத் தீவிலிருந்தே எண்ணெயைப் பெற்றுக்கொள்கிறது.

எனவே, கார்க் தீவு மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் ஈரானிய பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கார்க் தீவு மீதான தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கப் படைகள் கார்க் தீவின் இராணுவ இலக்குகளைத் தாக்கினாலும், எண்ணெய் ஏற்றுமதி மையங்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஹோர்முஸ் நீரிணை ஊடாகப் பயணிக்கும் எரிபொருள் கப்பல்கள் மீது ஈரானோ அல்லது வேறு தரப்பினரோ தாக்குதல் நடத்தினால், இந்தத் தீர்மானம் குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈரானின் எண்ணெய் மற்றும் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலுக்கும் பழிவாங்கும் நடவடிக்கையாக, அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவின் இராணுவ இலக்குகள் மீது நடத்தப்பட்ட அமெரிக்கத் தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈரானிய ஆயுதப் படைகளின் கூட்டு நடவடிக்கை கட்டளைப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## முழு நாடுமே ஒன்றாக தேசிய திட்டம்: போதைப்பொருளுடன் 990 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 15

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 990 பேர் போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 09 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 985 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், 02 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, 117 கிலோ 51 கிராம் ஹெரோயின், 478 கிலோ 959 கிராம் ஐஸ், 512 கிராம் கஞ்சா, 12,721 கஞ்சா செடிகள், 180 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 02 கிலோகிராம் 178 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 227 போதை மாத்திரைகள், 144 கிராம் மதனமோதகம் மற்றும் 02 கிலோ 971 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் தெய்வீக இசை அரங்கம்



யாழ்ப்பாணம், மார்ச். 15

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாரந்தம் நடைபெறும் நிகழ்ச்சி சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தெய்வீக இன்னிசையை ஆதித்தியா அருணகிரிநாதன் வழங்கினார்.

கீபோட் இசையினை இசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரனும், தபேலா இசையினை பா.கபிலனும், மிருதங்க இசையினை கலாவித்தகர் க.நந்தகுமாரும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-08)

## கூர்மையான ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் படுகொலை!

இரத்தினபுரி, மார்ச். 15

இரத்தினபுரி - அயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தூல்கல பகுதியில் பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.


வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் பதிவானது.

குறித்த பகுதியில் வீடொன்றுக்கு முன்னால் பெண் ஒருவர் கழுத்தில் பலத்த வெட்டுக் காயங்களுடன் விழுந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்த தகவலையடுத்து பொலிஸார், காயமடைந்த பெண்ணை மீட்டு அயகம மருத்துவமனையில் அனுமதித்தனர். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அயகம - தூல்கல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டார்.

இந்தக் கொலையை செய்த சந்தேகநபர்கள் குறித்து இது வரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.03.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# பாசாங்குத்தனத்தின் அதியுச்சம்

அயல் நாடுகளுக்கு எதிராக ஈரான் மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்தக்கோரி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் மார்ச் 11 வளைகுடா ஒத்துழைப்பு கவுன்ஸிலின் சார்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் பஹ்ரெய்ன் நாட்டினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை (2817) நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நாடுகளின் இறைமையை மதித்து நடக்க வேண்டும் என்றும் ஐ.நா. சாசனத்தின் கோட்பாடுகளையும் சர்வதேச சட்டத்தையும் மீறவேண்டாம் என்றும் தீர்மானம் ஈரானைக் கேட்டிருக்கிறது.

ரஷ்யாவும் சீனாவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நிலையில், பாதுகாப்புச் சபையில் 13 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. நிரந்தர உறுப்பு நாடுகள் இல்லாத பாகிஸ்தானும் சோமாலியாவும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்ஸில் பக்கமாக நின்றன.

அதேவேளை, அந்த தீர்மானத்தை தொடர்ந்து மத்திய கிழக்கில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி (எந்த நாட்டினதும் பெயரைக் குறிப்பிடாமல்) ரஷ்யாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தீர்மான வரைவு பாதுகாப்புச் சபை நிராகரித்திருக்கிறது.

அந்த வரைவை சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் ஆதரித்த அதேவேளை, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் உட்பட பாதுகாப்புச் சபையின் பல உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக, அயல்நாடுகள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று ஈரானைக் கோரிய தீர்மானத்தைக் கொண்டுவந்த பஹ்ரெயினும் ரஷ்ய வரைவு மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

பஹ்ரெயின் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் அதற்கு ஐ.நா.வின் 140 உறுப்பு நாடுகள் அனுசரணை வழங்கியிருந்தன. ஒரு நாட்டைப் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களை அங்கீகரிப்பதில்லை என்ற கொள்கை உட்பட பல்வேறு காரணங்களைக் கூறி இலங்கை உட்பட பல நாடுகள் அதில் இணைந்து கொள்ளவில்லை.

ஆத்திரமூட்டப்படாத நிலையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடமோ அல்லது அமெரிக்க காங்கிரஸிடமிருந்தோ அங்கீகாரத்தைப் பெறாமல் இஸ்ரேலுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட ரம்ப் தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புப் போர் உலகம் முழுவதையும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் நிலையில், பாதுகாப்புச் சபை அதைப்பற்றி கவலைப்படாமல் அயல்நாடுகள் மீதான ஈரானிய தாக்குதல்களுக்கு எதிராக மாத்திரம் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு எந்தக் கவலையும் கிடையாது என்றும் இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேச ஒழுங்கு (பிரதானமாக ஐக்கிய நாடுகள்) அமெரிக்காவுக்கு அநாவசியமான ஒரு சுமையாக இருப்பதாகவும் கூறி சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட உலக ஒழுங்கை நிர்மூலம் செய்துகொண்டிருக்கும் டொனால்ட் ட்ரம்பும் காசாவில் இனப் படுகொலைகளைச் செய்ததாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகுவும் செய்துவரும் சர்வதேச காடைத்தனம்தான் இனிவரும் உலக ஒழுங்கை தீர்மானிக்கப் போகின்றதா?

மார்ச் 11 பஹ்ரெயின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் ரஷ்ய வரைவு நிராகரிக்கப்பட்டமையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பாசாங்குத்தனத்தின் அதியுச்சமாகும்.

மத்திய கிழக்குப் போர் எப்போது முடிவடையும் என்று எவருக்கும் தெரியவில்லை. எதிர்பார்த்ததைப் போன்று விரைவான வெற்றியைப் பெறமுடியாத நிலையில் ட்ரம்பும் நெத்தன்யாகுவும் ஈரானைக் குண்டு வீச்சுக்களால் நிர்மூலம் செய்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை "அப்பட்டமான ஆக்கிரமிப்பு". என்று அழைக்க உலகம் தயங்குவது மனித நாகரிகத்தையே கேள்விக்கு உள்ளாக்குகிறது.

# கீரிமலை தீர்த்தக்கரையின் புனிதத்தன்மை முழுமையாகப் பேணிப் பாதுகாக்கப்படும்!

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி



*யாழ்ப்பாணம், மார்ச் 15*

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை புனித தீர்த்தக்கரையின் புனிதத்தன்மை முழுமையாகப் பேணப்பட்டுப் பாதுகாக்கப்படும் அதே வேளையில், அப்பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அமைந்துள்ள "தண்டிகை கனகநாயக முதலியார் மட ஆதனம்" வலிகாமம் வடக்கு பிரதேச சபையிடம் 100 ஆண்டுகளுக்கு குத்தகையின் அடிப்படையில் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை மணிக்கு நடைபெற்றது. வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1735ஆம் ஆண்டு தண்டிகை கனகநாயக முதலியாரால் நிறுவப்பட்ட இந்த மடமானது, காலம்காலமாக அவரது மரபுவழி வந்தவர்களால் நம்பிக்கைச் சொத்தாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், தெய்வங்கள் இளைப்பாறும் மண்டபம், அந்தியேட்டி மண்டபம் மற்றும் இரண்டு கடைகள் அடங்கலான எஞ்சிய நிலப் பகுதியை எதிர்காலப் பராமரிப்புக் கருதி வலிகாமம் வடக்கு பிரதேச சபையிடம் அதன் உரிமையாளர்களால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விசேட உரையாற்றிய ஆளுநர் நா. வேதநாயகன் மேலும் தெரிவிக்கையில் - கீரிமலை தீர்த்தக்கரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் புனிதமானவையாகும். அந்த இடத்தின் புனிதத்தன்மையைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டே நாம் அங்கு அபிவிருத்தி களைச் செய்ய வேண்டும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மடத்தைப் பிரதேச சபையிடம் கையளிப்பது மிகவும் பொருத்தமானதொரு முடிவாகும். குறித்த ஆதனம் பிரதேச சபைக்கு உரித்தானதாக இருந்தால் மாத்திரமே, அவர்களால் அங்கு முறையான அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியும். இந்த மடத்தை ஒரு முறையான நிர்வாக ஒழுங்குக்குள் கொண்டு வருவதன் ஊடாக, இங்கு வரும் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பல்வேறு நடைமுறைப் பிரச்னைகளுக்கும் நிரந்தரத் தீர்வைக் காண முடியும்.

அத்துடன், இந்தப் பிரதேசம் சுற்றுலா சார்ந்த பாரிய ஈர்ப்பையும் கொண்ட ஒரு பிரதேசமாகும். எனவே, அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவார்கள். சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளையில், இப்புனித பூமியின் புனிதத்தன்மையையும் நாம் எவ்விதக் குறையுமின்றிப் பேணிப் பாதுகாக்க வேண்டும் - என்றார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கௌரவ தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் செயலாளர், சிவாச்சாரியார்கள், சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர், நலன்விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# துறைமுகம், சிவில் விமான போக்குவரத்து குறித்து அமெரிக்கா - இலங்கை இடையே கலந்துரையாடல்

*கொழும்பு, மார்ச் 15*

இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.


துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் துறைமுக மற்றும் விமான போக்குவரத்து துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இத்துறைகளில் முக்கிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் வர்த்தக அதிகரிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


அத்துடன், இந்த ஒத்துழைப்பானது இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த பெரிதும் பங்களிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணிய நெஞ்சம் வேண்டும்!



இந்த பிரபஞ்சத்தின் வியக்கத்தக்க உயிரி இயந்திரமாக மனித மூளை இயங்குகிறது. நவீன காலத்தில் நாம் பயன்படுத்தும் கைப்பேசிகள், நமது சிந்தனையின் புற விரிவாக்கமாக மாறி, உடலின் ஓர் உறுப்பைப் போலவே நம்மோடு இணைந்துள்ளன. இந்தத் தொழில்நுட்பப் பிணைப்பை ஒரு பரிணாம வளர்ச்சி என நாம் பெருமிதம் கொள்கிறோம். மனதைத் தொழில்நுட்பத்தோடு ஒருமைப்படுத்திக் கொண்டால், வாழ்வின் செயல்பாடுகளை எளிதாக்க முடியும் என நம்புகிறோம்.

கடந்த காலங்களில், ஓர் அவசரத் தகவலைப் பகிர பல மைல்கள் கடந்து தந்தி அலுவலகங்களையே சார்ந்திருக்கும் சூழல் இருந்தது. ஆனால், இன்று, கைப்பேசி தொழில்நுட்பம் உலகையே நமது உள்ளங்கைக்குள் அடக்கியுள்ளது. ஒரு காலத்தில் முறையான கல்வி கற்க வசதியின்றித் தவித்த மாணவர்களும், இன்று கைப்பேசி வாயிலாக உலகின் மிகச் சிறந்த பல்கலைக்கழக நூலகங்களை ஒரு சிறு சொடுக்கில் அணுக முடிகிறது. இத்தகைய வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தினால் மனிதவளத்தை மேலும் வலுப்படுத்த முடியும்.

இத்தகைய மின்னணு மாற்றம் ஒருபுறம் பொருளாதார வளர்ச்சியை அளித்தாலும், மறுபுறம் 'மின்னணு அடிமைத்தனம்' (டிஜிட்டல் அடிக்ஷன்) எனும் உளவியல் சிக்கலையும் உருவாக்கியுள்ளது. விருப்பு-வெறுப்புகளைப் பகிர்வதற்கு இந்தச் சிறு திரையையே சார்ந்து இருக்கும்போது, மனிதச் சிந்தனை சிறைபிடிக்கப்படவும் நேர மேலாண்மை பாதிப்படையவும் வாய்ப்புள்ளதாகக் கூறுகிறார்கள். இதனால் உற்பத்தித் திறன் பாதிப்பு, தனிமனித உறவுகளில் விரிசல் போன்றவை எழாமல் காக்க வேண்டுமென பொருளாதார ஆய்வுகள் உணர்த்துகின்றன.

மின்னணுச் சூழலுக்கு ஏற்ப மனித மூளை தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது என்ற வாதங்கள் இருந்தாலும், வெறும் தகவல்களைச் சேகரிப்பதற்கும் உண்மையான அறிவைப் பெறுவதற்கும் இடையே அதிக வேறுபாடு உண்டு. தகவல்களையும் பொழுதுபோக்கு அம்சங்களையும் இணையம் வாரி வழங்கினாலும், மனிதனின் மனநலனையும் வாழ்வின் தரத்தையும் பாதுகாப்பதே அறிவியலின் உண்மையான சாதனையாக இருக்க முடியும்.

அறிதிறன்பேசிகளின் தொடர் பயன்பாடு நமது மூளையின் முன்பக்க மேலோடு (ப்ரீபிரண்டல் கார்டெக்ஸ்) பகுதியில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மனிதனின் உயரிய அடையாளமான மன ஆற்றலே அவனது பெரும் சொத்து எனலாம். ஐம்புலன்களால் உணரப்படுவதை உள்வாங்கிச் சிந்திக்கும் மன சக்தி முழுவதையும், நிகழ்காலத் தன்னுணர்வோடு நிலைபெறச் செய்வதே ஒரு மனிதன் அடையக் கூடிய மிகப் பெரும் வெற்றியாகும்.

மனம் புதிய ஈர்ப்புகளைக் காணும்போது உந்துதல் ஏற்படுவது இயல்பே. அங்கே எழும் சிந்தனைப் பாதை நோக்கமின்றி, தெளிவற்று இருந்தால் மன ஆற்றல் சிதைவதையும், மனிதனின் 'சீவகாந்தக் கவசம் குறைவதையும் அங்கே உணர முடியும். மனதின் இந்த ஆற்றல் இழப்பு, பின்னர் உயிர் மற்றும் உடல் ஆற்றல் இழப்பாகச் சங்கிலித் தொடர்போலத் தொடரச் செய்கிறது.

நில்லாத, கட்டுப்படுத்த இயலாத மனவோட்டம் இறுதியில் ஒருவித வெறுமையை உருவாக்குகிறது. இத்தகைய மன ஆற்றலைப் பேராற்றலாக மாற்றி அகம் நோக்கிப் பயணிக்கச் செய்தால் மட்டுமே, 'நான் யார்?" என்ற உயர்ந்த நிலையை உணர்ந்து மனிதன் அமைதி பெற முடியும்.

**மனத்திடைநின்ற மதிவா ளுருவி**
**புனத்திடை நஞ்சையும் போக மறித்தாற்**
**என திருமூலர் திருமந்திரத்தில் (1638)**
குறிப்பிடுகிறார்.

அகத்தில் நிலைபெறும் மனமே என்றும் நிறைவு காணும் புறப்பொருட்களில் சுழலும் மனம் வெறுமையையே எஞ்சச் செய்யும். இத்தகைய உறுதியான மனநிலையின் அவசியத்தையே மகாகவி பாரதியார் 'திண்ணிய நெஞ்சம் வேண்டும்' என்கிறார்.

கண்ணுக்குப் புலனாகாத மனதின் செயல்பாட்டை அறிவியலோடு ஒப்பிட்டும் புரிந்துகொள்ளலாம். ஒரு கட்டடத்தை மின்னல், மின்கசிவுப் பாதிப்பிலிருந்து காக்க புவித்தொடுப்பு முறை அவசியமாகிறது. அதுபோலவே, மனித மனதுக்கும் உள்ளார்ந்த பிணைப்பு (இன்னர் எர்த்திங்) எனும் மன ஆற்றல் மிக முக்கியம். மின்சுற்றில் ஆபத்தான மின்னோட்டத்தைப் பூமிக்குள் அனுப்பிச் சேதத்தைத் தவிர்ப்பது போல, மன அழுத்தம் அல்லது குழப்பம் சூழும் போது, நமது உள்ளார்ந்த ஆற்றல் நம்மைச் சமநிலைக்குக் கொண்டுவர உதவுகிறது.

தேசிய நலன் சார்ந்த மனிதவளக் குறியீடுகளில் ஒன்றாக மன ஆற்றல் பாதுகாப்பையும் கருத வேண்டும். இணையத்தில் மூழ்கச் செய்யும் 'ஸ்க்ரோலிங் மற்றும் ஆட்டோ பிளே' போன்ற தொழில்நுட்பங்கள், உளவியல் ரீதியாகப் பயனாளர்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே, 'எண்மப் பெற்றோரியம்' (டிஜிட்டல் பேரன்டிங்) குறித்த விழிப்புணர்வை சமுதாயத்தில் ஆழமாக விதைக்க வேண்டும்.

சமூக ஊடகங்களின் வணிக நோக்கம் கொண்ட உளவியல் உத்திகளைக் கட்டுப் படுத்த, முறையான கொள்கைகளை அரசு வகுக்க வேண்டும். பதின்ம பருவத்தினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் ஆஸ்திரேலியா, ஸ்பெயின் போன்ற நாடுகள் சில கட்டுப்பாடுகளை வகுத்துள்ளன. நம துநாட்டிலும் இதுபோன்ற விழிப்புணர்வும் நெறிமுறைகளும் உருவாக வேண்டும். மன வளம் கொண்ட மனிதனே அகத்தின் அமைதியையும் வாழ்வின் அழகையும் உணர முடியும். இதுவே அறிவின் படிக்கட்டுகளாக மாறி, மனித வளமாக உருமாற வழிவகுக்கும்.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 15.03.2026 - 22.03.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 03
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அற்புதமான பலன்கள் கிடைக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல முறையில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் மேம்பட்டு பொருள் வரவு உண்டாகும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சங்கடங்கள் விலகி மன மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அற்புதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சங்கடமான நிலை உண்டாகும், சில இடங்களில் பொறாமையுடன் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்லபடியாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் நல்ல மன நிம்மதி கிடைக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிரமம் இருக்கும், சில இடங்களில் போராட்டம் அதிகமாக இருக்கும். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம்: எதிர்பாராத இடமாறுதல் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. உயர் அதிகாரிகளிடம் பொறுமையை கையாள வேண்டும். திறமையை வெளிப்படுத்தவும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை மேம்படும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி நிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் சீரும் சிறப்பும் உண்டாகும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் பண இருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் சிரமங்கள் நீங்கி நிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் சந்தோஷம் உண்டாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போட்டி இருக்கும். சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் திட்டமிட்டு இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் விலகும், பிள்ளைகளால் குதூகலம் உண்டாகும். செல்வாக்கு உயரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கு வழி ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும் , சில இடங்களில் பாதிப்பு இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல விதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சிறப்பாக இருக்கும். வார கடைசியில் பொருளாதாரம் உயரும், குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரித்து மகிழ்ச்சி உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக ஏற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு கஷ்டம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய அதிகரிப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் வார மத்தியில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி கலகலப்பு அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் இருக்கும். சில இடங்களில் நன்மைகள் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில பிரச்சனைகள் வரலாம், ஆனால் காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சிறப்பாக இருக்கும், கடுமையான முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். பிள்ளைகளால் சில சிக்கல்கள் முடிவுக்கு வரும். சாதகமான சூழ்நிலை அமையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் பொறாமை இருக்கும். உத்தியோக ரீதியாக உங்கள் திறமைக்கேற்ற உயர்வு உண்டாகும். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பொருள் வரவு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். சந்தோசம் உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிக்கல்கள் உண்டாகும், சில இடங்களில் போராட்டமாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய மாறுதல்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து செல்வாக்கு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை மேம்படும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கி நிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் சீரும் சிறப்பும் உண்டாகும். குடும்பத்தில் இருந்த கஷ்டங்கள் விலகும். மன அமைதியும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிமுறை தொடர்பான ஒரு நூற்றாண்டு விவாதமும் அதிகாரப்பரவலாக்க அலகாக மாகாணங்கள் வந்த கதையும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகள் இயக்கத்துக்கும் இடையில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தூதுக் குழுவுக்கு தலைமை வகித்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அண்மையில் 'இலங்கையின் சமாதான செயன்முறை: ஒரு உட்பக்க நோக்கு' என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

சமாதானச் செயன்முறையை அந்த நேரத்தில் அரசாங்கம் எந்தளவுக்கு நேர்மையுடன் முன்னெடுத்தது என்பதைப் பற்றி எங்களுக்கு தனியான அபிப்பிராயம் இருக்கிறது என்ற போதிலும், அரசாங்கத்தின் தலைமைப் பேச்சாளராக பேராசிரியர் பீரிஸ் பங்கேற்றவர் என்பதால் அவரது நூல் பரவலான கவனித்துக்கு உரியதாக இருக்கிறது.

நூலின் முதல் அத்தியாயத்தின் முதற் பந்தியிலேயே அவர் இலங்கையில் அதிகாரங்களை பகிர்ந்துகொள்வது தொடர்பிலான யோசனையின் தோற்றுவாய் குறித்து தெரிவித்த கருத்து இன்று சகல தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளும் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையில் நிலையான தீர்வொன்று காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நிற்கும் பின்புலத்தில் சகல சமூகங்களைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

"கரையோரச் சிங்களவர்களுக்கும் மலைநாட்டுச் சிங்களவர்களுக்குமாக இரு அலகுகளையும் தமிழர்களுக்காக வடக்கு - கிழக்கில் ஒரு அலகையும் கொண்ட ஒரு சமஷ்டி ஏற்பாட்டை 1927 ஆம் ஆண்டில் கண்டிச் சிங்களவர்கள் முன்மொழிந்தனர்."


தனது நூலின் ஊடாக ஆராயப்படும் அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சமஷ்டிமுறை என்ற தொனிப் பொருட்கள் அவற்றின் தோற்றுவாயை இனத்துவத்துடன் தொடர்புடைய பிரச்னைகளில் கொண்டிருக்கவில்லை என்று எழுதியிருக்கும் பேராசிரியர், இலங்கைக்கு பொருத்தமான ஒரு ஆட்சிமுறைக் கட்டமைப்பாக சமஷ்டிமுறை முற்றிலும் வேறுபட்ட ஒரு பின்புலத்திலேயே முன்மொழியப்பட்டது என்பதை நினைவூட்டுகிறார்.

தொடக்கத்தில் சமஷ்டி முறை யோசனை தமிழர்களின் அபிலாசைகளுடன் அல்ல, கண்டிச் சிங்களவர்களின் அபிலாசைகளுடனேயே தொடர்புபட்டதாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறைக்காக குரலெழுப்பி இந்த வருடத்துடன் சரியாக ஒரு நூற்றாண்டு நிறைவடையும் நிலையில் பேராசிரியர் இதைக் குறிப்பிட்டிருப்பது தற்செயலானதாக இருந்தாலும் கூட, அதில் ஒரு பொருத்தப்பாடு இருக்கிறது.

கனடாவில் வாழும் மூத்த இலங்கைப் பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் '100 வருடங்களுக்கு முன்னர் பண்ட ரநாயக்க விடுத்த சமஷ்டி ஆட்சி முறைக்கான அறைகூவல்" என்ற தலைப்பில் அண்மையில் ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி ஆட்சிமுறைக்காக குரலெழுப்புவதற்கு நீண்டகாலத்துக்கு முன்னதாகவே 1920 களின் முற்பகுதியில் இளம் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவும் அந்த தசாப்தத்தின் பிற்பகுதியில் டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் கண்டிச் சிங்களப் பிரதிநிதிகளும் சமஷ்டி முறைக்காக குரல் கொடுத்தனர் என்றும் வடக்கு - கிழக்கு மாகாணம் ஒன்று உட்பட மூன்று மாகாணங்களுடனான சமஷ்டி இலங்கை யோசனையை கண்டிச் சிங்களவர்கள் முன்வைத்தனர் என்றும் அரசியலமைப்புச் சட்ட நிபுணரான கலாநிதி றொஹான் எதிரிசிங்க 'சமஷ்டி முறை: மாயைகளும் யதார்த்தங்களும்'என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டதை மேற்கோள் காட்டியே ஜெயராஜ் தனது கட்டுரையை தொடங்கினார்.



"அந்த யுகத்தின் அரசியல் தலைவர்கள் மத்தியில் தலைசிறந்த அறிவுஜீவியான பண்டாரநாயக்க ஒரு வகையான சமஷ்டிமுறை மாத்திரமே இலங்கையின் ஆட்சிமுறைப் பிரச்னைக்கு தீர்வாக இருக்க முடியும் என்று முன்கூட்டயே 1926 ஆம் ஆண்டளவில் வாதாடினார்.

"கரையோரச் சிங்களவர்களுக்கும் மலைநாட்டுச் சிங்களவர்களுக்குமாக இரு அலகுகளையும் தமிழர்களுக்காக வடக்கு - கிழக்கில் ஒரு அலகையும் கொண்ட ஒரு சமஷ்டி ஏற்பாட்டை 1927 ஆம் ஆண்டில் கண்டிச் சிங்களவர்கள் முன்மொழிந்தனர்.

"சிங்களவர்களினால் முன்மொழியப்பட்டபோது சமஷ்டிமுறையை இலங்கைத் தமிழர்கள் நிராகரித்தார்கள். தங்களுக்கு கிடைத்த அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்காக சமஷ்டிமுறையை வழங்குமாறு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் கோரிக்கையை முன்வைத்திருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய சகல சாத்தியப்பாடுகளும் இருந்தன.

"பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலத்தில் இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி முறையையோ அல்லது தனி நாட்டையோ கூட கோரவில்லை. பதிலாக அந்தக் கோரிக்கைகளை தமிழ்த் தலைவர்கள் பிரிட்டிஷார் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர் மாத்திரமே முன்வைத்தனர்" என்று அவர் எழுதியிருந்தார்.

நூறு வருடங்களுக்கு முன்னர் ' மோர்ணிங் லீடர்' பத்திரிகைக்கு ஆறு கடிதங்களை எழுதிய பண்டாரநாயக்க, இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே பொருத்தமானது என்று தமிழர்களை நம்பவைப்பதற்கு 'யாழ்ப்பாண விரிவுரையை' நிகழ்த்த 1926 ஜூலை 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அன்றைய தினம் 'எமது அரசியல் பிரச்னைகளுக்கு ஒரே தீர்வு சமஷ்டி முறையே' என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் இனவேறுபாடுகளைக் கையாளுவதற்கும் பிராந்திய சுயாட்சியே சீரான வழி என்று வவாதிட்டார்.



சமஷ்டி முறைக்காக குரல்கொடுக்க தன்னுடன் இணைந்து கொள்ளுமாறு அவர் விடுத்த வேண்டுகோளை தமிழர்கள் நிராகரித்தார்கள். யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் ( பிறகு அது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது) சமஷ்டிமுறை யோசனையை எதிர்த்தது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பிரகாசமான கல்வியைப் பெற்றதன் பின்னர் 1925 ஆம் ஆண்டில் நாடுதிரும்பிய பண்டாரநாயக்க இலங்கை தேசிய காங்கிரஸின் உறுப்பினராக இருந்த அதே வேளை, அரசியல் சுயாட்சி இலக்கை அடைவதற்காக முற்போக்கு தேசியக் கட்சியை ஆரம்பித்தார். அந்த கட்சியின் யாப்பு பண்டாரநாயக்கவின் மனதில் இருந்த சமஷ்டி ஆட்சிமுறை பற்றிய திட்ட வரைவு ஒன்றை உள்ளடக்கியதாக இருந்தது.

கரையோரச் சிங்களவர்களையும் மலைநாட்டுச் சிங்களவரையும் தமிழர்களையும் நாட்டின் பிரதான குழுக்களாகக் குறிப்பிட்ட அந்த யாப்பு ஒவ்வொன்றும் முற்றுமுழுதான சுயாட்சியைக் கொண்ட ஒன்பது மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

பண்டாரநாயக்கவின் யோசனையை அவரின் நெருங்கிய நண்பரான கல்விமான் ஜேம்ஸ் ரி. இரத்தினத்தை தவிர, முற்போக்கு தேசிய கட்சியின் சகல உறுப்பினர்களும் ஆதரித்தனர். சமஷ்டிமுறை தொடர்பிலான யோசனை அந்த கால கட்டத்தில் இனவாத உணர்வுகளையோ அல்லது சிங்களவர்களிடமிருந்து எதிர்ப்பையோ கிளப்பவில்லை. அந்த யோசனைக்கு கடுமையான எதிர்ப்பு ஒரு சிங்களவரிடமிருந்து அல்ல, தமிழரிடமிருந்தே வந்தது என்று ஜெயராஜ் எழுதினார்.

இது இவ்வாறிருக்க, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பிரபல்யமான பிரிட்டிஷ் சிவில்சேவை அதிகாரியாக இருந்த லெனார்ட் வூல்வ் 1930 களின் பிற்பகுதியில் இலங்கைக்கு சுவிட்சர்லாந்தின் கன்ரோன் முறையே அதிபொருத்தமானது என்ற கருத்தை முன்வைத்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

1938 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் லெனார்ட் வூல்வ் கரையோரச் சிங்கள மாகாணம், கண்டியச் சிங்கள மாகாணம், தமிழ் வடக்கு மாகாணம், தமிழ் கிழக்கு மாகாணம் என்று நான்கு கன்ரோன்களையும் மலைநாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தேயிலைத் தோட்டப்பகுதிகளை உள்ளடக்கி ஐந்தாவது கன்ரோன் ஒன்றையும் உருவாக்கலாம் என்று யோசனையை முன்வைத்தார்.

பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து அன்றைய தமிழ்த் தலைவர்கள் சமஷ்டிமுறைக்காக குரல்கொடுத்துப் போராடியிருந்தால் இலங்கையின் அரசியல் வரலாறு நிச்சயமாக வேறுபட்டதாக இருந்திருக்கும்.

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் தேசிய நலன்களைப் பேணுவதற்காக அவர்களுக்கென்று தனியொரு கன்ரோனை பரிந்துரைத்த ஒருவர் என்றால் நாமறிந்தவரை அது லெனார்ட் வூல்வ் மாத்திரமேயாவார்.

கன்ரோன் முறையை அறிமுகப்படுத்தக்கூடிய அளவுக்கு இலங்கை பெரிய நாடு அல்ல என்ற வாதம் முன்வைக்கப்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த அவர் இலங்கையின் பரப்பளவு சுவிட்சர்லாந்தின் பரப்பளவை விடவும் 10 ஆயிரம் சதுரமைல்கள் அதிகம் என்று சுட்டிக் காட்டியதுடன் இனத்துவ அடிப்படையிலான சனத்தொகையைப் பொறுத்தவரை சுவிட்சர்லாந்தில் ஜேர்மன் மொழி பேசுபவர்களை இலங்கையில் சிங்களவர்களுடனும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களை தமிழர்களுடனும் இத்தாலி மொழி பேசுபவர்களை முஸ்லிம்களுடனும் ஒப்பிட்டார்.

இவை ஒரு காலனித்துவ நிருவாகியாக இருந்த முற்போக்குவாதியான ஆங்கிலேயர் ஒருவர் ஏழு ஆண்டுகள் இலங்கையில் வாழ்ந்து அதன் மக்களை நெருக்கமாக அறிந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களின் விளைவாக முன்வைத்த யோசனைகளாகும்.

பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து அன்றைய தமிழ்த் தலைவர்கள் சமஷ்டிமுறைக்காக குரல்கொடுத்துப் போராடியிருந்தால் இலங்கையின் அரசியல் வரலாறு நிச்சயமாக வேறுபட்டதாக இருந்திருக்கும்.

1931 ஆம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பின் மூலமாக சர்வஜன வாக்குரிமையும் பிராந்திய அடிப்படையிலான பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து பண்டாரநாயக்கவின் அரசியல் நோக்கில் மாற்றம் ஏற்பட்டது. இதற்கு பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகளை அடுத்தவாரம் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலம் ஒன்றில் மனிதாபிமானத் தலைமைத்துவம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஈரானிய கடற்படைக் கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ். டினா மூழ்கடிக்கப்பட்டதை தொடர்ந்து தோன்றிய நிலைவரத்தைக் கையாளுவதில் அரசாங்கம் கடைப்பிடித்த மனிதாபிமான அணுகுமுறை முற்றிலும் சரியானதே என்று நாட்டில் மிகவும் அரிதான கருத்தொருமிப்பு காணப்படுகிறது. இந்த ஆதரவு கட்சி வேறுபாடுகள் கடந்தும் சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளிடமிருந்தும் பரந்தளவில் வந்திருக்கிறது. இலங்கை மனிதாபிமானக் கோட்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கிறது என்ற நிலைப்பாட்டை சமூக ஊடகங்களில் வெளியான கருத்துக்கள், அரசியல் கட்சிகளின் அறிக்கைகள் பிரதான ஊடகங்களில் வெளியான கருத்தாடல்களில் பெருமளவில் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் பொது விவாதங்கள் பெரும்பாலும் கடுமையாக பிளவுபட்டிருக்கின்ற ஒரு காலகட்டத்தில் , ஈரானிய கப்பல் விவகாரத்தில் இணக்கப்பாட்டு உணர்வு காணப்படுவது கவனிக்கத்தக்கது. அத்துடன் அது ஆபத்தில் சிக்கியிருப்பவர்களுக்கு உதவும் சமுதாயம் ஒன்றின் பண்பாண்மையையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கிறது. கடந்த வருடம் டிசம்பரில் டித்வா சூறாவளியினால் பாதிக்கப்படவர்களுக்கு உதவுவதில் இன வேறுபாடுகள் மற்றும் பின்புலங்களுக்கு அப்பால் மக்கள் அணிதிரண்டு நின்றதிலும் இதே போன்ற தோற்றப்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த நிலைவரத்துக்கு வழிவகுத்த நிகழ்வுகள் வியக்கத்தக்க வேகத்தில் கட்டவிழ்ந்தன. சூரிய உதயத்துக்கு முன்னர் அதிகாலை வேளையில் டினா கப்பல் அவசர உதவிக்கு அழைப்பு விடுத்தது. அந்த கப்பல் இந்தியாவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கடற்படைப் பயிற்சியில் பங்கேற்ற மூன்று ஈரானியக் கடற்படைக் கப்பல்களில் ஒன்றாகும். அந்த பயிற்சியில் இலங்கை உட்பட எழுபதுக்கும் அதிகமான நாடுகள் பங்கேற்றிருந்தன. இந்த வகையான கடற்படைப் பயிற்சிகள் துறைசார் நிபுணத்துவங்கள் பரிமாறப்படுவதை வளர்ப்பதையும் கடற்படைகளுக்கு இடையில் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவையாகும்.

கடற்படைப் பயிற்சி முடிவடைந்தபோது அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் போர் மூண்டிருக்கவில்லை. அந்த பயிற்சியில் பங்கேற்ற மூன்று ஈரானியக் கப்பல்களும் இந்தியத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு நாடுதிரும்பும் அவற்றின் பயணத்தில் சர்வதேச கடற்பரப்பிற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தன. இத்தகைய கடற்படைப் பயிற்சிகள் தொடர்பிலான விதிமுறைகளின் கீழ் தாக்குதல்களுக்கு பயன்படுத்தும் படைக்கலங்களை பயிற்சியில் பங்கேற்கும் கப்பல்கள் கொண்டிருக்காமல் இருக்கலாம்.

அதனால், பிராந்திய நிலைவரம் முற்றுமுழுதாக மாறியதும் கப்பல்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைக்குள்ளாகிவிட்டன. இந்த ஈரானியக் கப்பல் தாக்குதல்களுக்கு பயன்படுத்தக்கூடிய படைக்கலங்களைக் கொண்டிருந்தாக அமெரிக்க கடற்படையின் இந்தோ- பசுபிக் கட்டளையகம் கூறுகிறது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் போர் திடீரென வெடித்தமையால் ஆபத்திற்குள் பிரவேசப்பதாக இந்த கப்பல்களுக்கு ஈரான் எச்சரிக்கை அறிவிப்பை விடுத்திருக்கும். பாதுகாப்புக்காக இலங்கை துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு வேண்டுகோள் விடுத்ததாகவும் ஆனால், இலங்கை அரசாங்கம் பதிலளிப்பதற்கு முன்னதாக டினா கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியின் ஏவுகணை ஒன்றின் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டது.


இலங்கையின் கடற்பரப்புக்கு சற்று வெளியே டினா கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இந்த நேரத்தில் இலங்கை எத்தகைய தீர்மானத்தை எடுத்திருந்தாலும், அது விளைவுகளைக் கொண்டிருக்கப்போகிறது. மத்திய கிழக்கின் தற்போதைய போர் எதைப்பற்றியும் யோசிக்காமல் நடத்தப்படுகிறது. அதில் பதினைந்துக்கும் அதிகமான நாடுகள் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. இப்போது இலங்கையின் கடல் எல்லைக்கு நெருக்கமாக டினா மூழ்கடிக்கப்பட்டிருக்கும் சம்பவம் எமது நாட்டின் கரையோரத்துக்கு போர் நெருங்கிவந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது.

போர்க்காலங்களில் சகல தரப்பிலும் உணர்ச்சிகள் பெருகிக் காணப்படும். எதிரிகளினதும் நண்பர்களினதும் எண்ணங்கள் திரிபுபடுத்தப்படலாம். போரில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தங்கள் பக்கத்தில் நிற்காதவர்களை தங்களுக்கு எதிரானவர்கள் என்று நினைத்து நிலைப்பாடுகளை எடுப்பதை நோக்கி தள்ளப்படுவர். அத்தகைய எண்ணம் நடுநிலைக்கோ அல்லது மனிதாபிமான தன்விருப்புக்கோ இடந்தராது.

அத்தகைய சூழ்நிலைகளில் மோதல்களில் நேரடியாகச் சம்பந்தப்படாத நாடுகள் இடையில் அகப்படுவதை தவிர்ப்பதற்காக வெளியில் இருக்கவே விரும்பும். தற்போதைய நெருக்கடியை இலங்கை கையாளுகின்ற விதம் மனிதாபிமானக் கோட்பாடுகள், சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டது என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் சர்வதேச ஊடகங்களுக்கு அறிவித்திருக்கிறார்.

*1982* ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடல் சட்டம் தொடர்பான சாசனம் கடல்சார் நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் சட்டக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதுடன் கடலில் ஆபத்துக்கு உள்ளாவோருக்கு உதவி வழங்குவதற்கு அரசுகளை கடமைப்படுத்துகிறது. கடலில் ஆபத்தை எதிர்நோக்குபவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையோ அல்லது எத்தகைய சூழ்நிலை அந்த ஆபத்தைத் தோற்றுவித்தது என்பதையோ பொருட்படுத்தாமல் அவர்களுக்கு நாடுகள் உதவ வேண்டும் என்று அந்த சட்டம் கூறுகிறது. அதனால், உதவிக்கு விடுக்கப்பட்ட அவசர அழைப்பையடுத்து இலங்கை எடுத்த நடவடிக்கை மனிதாபிமானத்தையும் சர்வதேச சட்டத்துக்கு மதிப்பளிப்பதையும் பிரதிபலிக்கிறது.

தாக்குதலுக்கு உள்ளான ஈரானியக் கப்பலில் இருந்து உதவிகோரி அழைப்பு கிடைக்கப்பெற்ற ஒரு குறுகிய நேரத்திற்குள் மீட்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கம் அதன் கடற்படையை அனுப்பியது. நீர்மூழ்கியின் தாக்குதலில் உயர்தப்பி, கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த முப்பதுக்கும் அதிகமான ஈரானியக் கடற்படையினரை இலங்கைக் கடற்படை மீட்டுக் காப்பாற்றியது. அந்த மீட்பு நடவடிக்கையில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது பலியான எண்பதுக்கும் அதிகமானவர்களின் சடலங்கைளயும் கரைக்குக் கொண்டு வந்தது. மனிதாபிமானச் சவாலின் அளவு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.





**உள்நாட்டில் சொந்தப் பிரச்சினைகளுக்கு மானசீகமாக தீர்வுகளைக் காண்பது சர்வதேச சமூகத்தில் இலங்கையின் தார்மீக மதிப்பை வலுப்படுத்தும் என்பதுடன் புதிய சிறந்த ஒரு உலகத்துக்கான சக்தியாக மாறுவதற்கும் உதவும்.**

இலங்கை இப்போது எண்பதுக்கும் அதிகமான ஈரானியர்களின் சடலங்கைளை வைத்திருக்கிறது. மேலதிகமாக, இரு நூறுக்கும் அதிகமான கடற்படையினருடன் வந்த ஐ.ஆர்.ஐ.எஸ். புஷெஹ்ர் என்ற இரண்டாவது ஈரானிய கடற்படைக் கப்பலும் இலங்கையின் பாதுகாப்பில் இருக்கிறது. அதனால் அரசாங்கம் உயிர் தப்பியவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அதேவேளை, இறந்து போன ஈரானிய கடற்படையினரின் சடலங்களை கண்ணியமான முறையில் கையாளுவதற்குமான பொறுப்பைக் கொண்டிருக்கிறது.

அரசியல் கடப்பாடு காரணமாக இல்லாமல் மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையில் உதவி செய்வதற்கு இலங்கை எடுத்த தீர்மானம், சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கின் முக்கியத்துவத்தை சகல நாடுகளுக்கும் உணர்த்துவதாக இருக்கிறது. குறிப்பாக, பெரிய நாடுகளுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வல்லமை இல் லாத இலங்கையைப் போன்ற சிறிய நாடுகள் சர்வதேச சட்டத்தில் தங்கியிருக்க வேண்டியது முக்கியமானதா கும். இணங்கிக் கொள்ளப்பட்ட நியமங்களின் கட்ட மைப்பு ஒன்றிற்குள் சகல அரசுகளுமே செயல்படுவதை உறுதி செய்வதன் மூலமாக சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கு இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு ஒரு குறைந்தபட்ச பாதுகாப்பையா வது வழங்குகிறது.

அத்தகைய நியமங்களை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை இலங்கை வகித்திருக்கிறது. இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாகப் பிரகடனம் செய்யும் தீர்மானமொன்றை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1971 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இதற்கான யோசனை இலங்கையிடமிருந்தே வந்தது. பெரிய வல்லரசுகளின் போட்டாபோட்டி மற்றும் இராணுவமயமாக்கலில் இருந்து இந்து சமுத்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இலங்கை வாதிட்டது.

துரதிர்ஷ்டவசமாக, சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு இயங்குவதாக இல்லை என்பதையே தற்போதைய உலக சூழ்நில் உணர்த்துகிறது. இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் சர்வதேச நடத்தைகளை ஒழுங்கமைப்பதற்காக உருவாக்கப்பட்ட நியமங்களும் நிறுவனங்க ளும் அலட்சியம் செய்யப்படும் போக்கு அதிகரித்து வருகிறது என்பதையே உலகின் வெவ்வேறு பாகங்களில் இடம்பெறுகின்ற மோதல்கள் காட்டுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச சட்டம் மீதான பற்றுறுதியை வெளிக்காட்டுவது சிறியநாடுகளைப் பொறுத்தவரை, மேலும் கூடுதலான அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக வந்து விட்டது என்பதுடன் பெரிய நாடுகள் பெருமளவுக்கு எல்லோருக்கும் பொதுவான சிந்தனையையும் மனிதாபி மான அணுகுமுறையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது அவசியம்.

அதனால், இத்தகைய பரந்த பின்புலத்திலேயே ஈரானிய கடற்படையினர் விடயத்தில் இலங்கையின் மனிதாபிமான அணுகுமுறையை நோக்க வேண்டும். ஆபத்தில் இருந்தவர்களை மீட்பதற்கு துரிதமாக நடவடிக்கைகளை எடுத்ததன் மூலமாக இலங்கை அதன் செயல்பாடுகள் சர்வதேச வழிகாட்டலின் அடிப்படையிலானவை என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. சமாதானப் பண்புகள், மனிதநேயப் பண்புகள், ஒத்துழைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் ஒரு நாடாக இலங்கை அதன் புகழை மேம்படுத்தியிருக்கிறது. ஈரானிய கடற்படையினரை நாடுதிருப்பியனுப்ப வேண்டாம் என்று இலங்கையை அமெரிக்க அரசாங்கம் வலியுறுதியதாக முன்னதாக வந்த அறிவிப்பு பிறகு மாற்றியமைக்கப்பட்டது இலங்கைக்கு பெரும் ஆறதலாக அமைகிறது. இலங்கை எடுத்த நடவடிக்கை சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலானது என்பதை அமெரிக்கா பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

உள்நாட்டு மோதலின் விளைவான இலங்கையின் சொந்த அனுபவங்கள் பொதுமக்களின் உணர்வுகளையும் முக்கியமான வழிகளில் வடிவமைத்திருக்கிறது. சுமார் மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டுப் போரினால் இலங்கை அவலப்பட்டது. அந்த காலப்பகுதியில் மோதலில் ஈடுபட்ட தரப்பினருக்கு சிகிச்சை அளிப்பது, குடிமக்களைப் பாதுகாப்பது, ஆட்கள் காணாமல்போவது மற்றும் பொறுப்புக் கூறலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் முக்கியமானவையாக இருந்தன. அதன் விளைவாக, போர்க் குற்றங்கள், காயமடைந்தவர்கள் அல்லது சண்டைகளில் ஊனமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் மோதல்களில் காணாமல் போனவர்களின் கதி ஆகியவற்றைக் கையாளும் சர்வதேச சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இலங்கை இன்று பரிச்சயமானதாகி விட்டது.

மனிதாபிமான மற்றும் போருக்கு பின்னரான பிரச்னைகளில் அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் வடிவில் சர்வதேச பிரசன்னம் தொடர்ந்தும் இலங்கையில் இருக்கிறது. மனிதாபிமானம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீது காண்பிக்கும் கோட்பாட்டு ரீதியான பற்றுறுதியை அரசாங்கம் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் உட்பட இலங்கையின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. செயலர் ரில்வின் குறிப்பிடும் மாகாண சபை 'முறைமை' என்பது மாகாண சபை 'தேர்தல்' என்பதல்ல!

பனங்காட்டான்



மாகாணசபைத் தேர்தல் விரைவில் இடம்பெறுமென்ற அதீத நம்பிக்கையில் அதனைநோக்கி வேகமாகப் பயணத்தை ஆரம்பித்த தமிழ்த் தேசிய கட்சிகள் எனப்படுபவர்கள் இப்போது ஏனோ ஒரு சோர்வு நிலையில் காணப்படுவதுபோல் தெரிகிறது.

தேர்தலை மையப்படுத்தியும், தலைமைக் கதிரையில் கண் வைத்தும் ஒற்றுமையை நோக்கி முன்னெடுத்த முயற்சிகள் பிசுபசுத்துவிட்டதுபோல் தெரிகிறது. இப்போது இவர்களின் கவனத்தை மிக இலாவகமாக புதிய அரசியலமைப்பின் பக்கம் திருப்பிவிட்டுள்ளது அநுரகுமரவின் தேசிய மக்கள் அரசு.

இந்த அரசாட்சியை அநுரகுமர என்ற ஜனாதிபதியின் தலைமையிலானது என்று சொன்னாலும்,அநுரகுமர மாகாணசபைத் தேர்தல்கள் பற்றி எப்போதும் உறுதியாகக் கூறியதாக இல்லை. கடந்த நவம் பரில் தம்மைச் சந்தித்த தமிழரசுக் கட்சியினரிடம் அனைவரும் ஏற்கும் அரசியல் தீர்வொன்று புதிய அரசியலமைப்பினூடாக மேற்கொள்ளப்படும் என்று கூறி, தமிழரசுக் கட்சியினரை வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

மாகாணசபைத் தேர்தலோ புதிய அரசியல் அமைப்போ எதுவாயினும் ஜனாதிபதி வழியாக அநுரகுமரவினால் முடிவெடுக்க முடியாதவை என்பது தமிழரசுக் கட்சியினருக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் தெரியும்.

அண்மைக் காலங்களில் சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் அழைப்பின் பேரில் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அங்கு சென்றிருந்தார். கொழும்பிலுள்ள சில வெளிநாடுகளின் தூதுவர்கள் ஜே.வி.பி.யின் தலைமை அலுவலகம் சென்று ரில்வின் சில்வாவுடன் உரையாடி வருகின்றனர்.சில பிரதான ஊடகங்கள் இதனை செவ்விகண்டு ஆட்சி பீடக் கொள்கைகளை விலாவாரியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் புரிந்துகொள்ளக் கூடியதாகவிருப்பது தேசிய மக்கள் சக்தி அரசும் அதன் ஜனாதிபதியும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் - மொத்தத்தில் இந்த அணியிலுள்ள எவருமே ரில்வின் சில்வாவின் விரலசைவின்றி எதனையும் செயல்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் என்பது.

அப்படியெனில் தமிழரசுக் கட்சியின் குழுவொன்று ரில்வின் சில்வாவை சந்தித்து இனப்பிரச்சனைக்கான தீர்வு, மாகாண சபைத் தேர்தல், புதிய அரசியலமைப்பு விடயங்களை பேசுவதற்கு ஏன் விரும்பவில்லையென்று தமிழரசின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரிடம் இப்பத்தியாளர் அண்மையில் கேட்டார்.பதிலளித்த அவர், உண்மைதான். அதுபற்றி நாங்கள் யோசிக்கத்தான் வேண்டும். விரைவில் ஒரு முடிவெடுப்போம் என்று பட்டும் படாமலும் கூறினார். இது அவரது வழமையான பிடிபடாதபதில். இதற்குமேல் எதுவும் சொல்லி அவரை சிக்கலில் மாட்ட நான் விரும்பவில்லை.

ஆனால், அடுத்த சிலநாட்களில் ரில்வின் சில்வாவின் செவ்வி ஒன்று ஊடகங்களில் வெளியானது. இந்தச் செவ்விக்கு ஈழநாடு பத்திரிகையின் தலையங்கம் பின்வருமாறு இருந்தது: இனப்பிரச்னைக்கு தீர்வு எட்டும்வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது - ரில்வின் சில்வா திட்டவட்டம், என்றிருந்தது இத்தலையங்கம்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு நிலையானமாற்றுத் தீர்வை கண்டுபிடிக்கும்வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது என்று மிக விளக்கமாக அவர் இங்கு தெரிவித்திருந்தார். தொடர்ந்து இதுபற் றிக் குறிப்பிடுகையில் இனப் பிரச்சனைக்கு சரியான தீர்வை உருவாக்க வேண்டுமென்ற எமது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்த நோக்கத்தை மாகாணசபைகள் நிறைவேற்ற உதவவில்லையென்று ஒரு குற்றச்சாட்டை இங்கே சுட்டியிருந்தார்.

ரில்வின் சில்வா அத்துடன் நிறுத்தவில்லை - எதுவாயினும் ஒரு சிறந்த மாற்றுத் தீர்வை தேடும்வரை மாகாணசபைகள் அவ்வாறே இருக்கும். அதனை எட்டாமல் மாகாணசபையை நாம் அகற்றப்போவதில்லையென்று மிகவும் விளப்பமாகவும் இங்கு தெரிவித்திருந்தார்.

> மாகாண சபைகள் அமைப்பு ஜே.வி.பி.யின் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவைகளை முழுமையாக நிறைவேற்ற உதவவில்லையென்று குற்றஞ்சாட்டியுள்ள இதன் செயலர் ரில்வின் சில்வா, இதற்கான மாற்றீட்டைத் தேடும்வரை மாகாண சபைகள் முறைமை அவ்வாறே இருக்குமென சுட்டியிருப்பது ஆளுனர்களின் நிர்வாகத்தையே தவிரதேர்தலுக்கான உறுதிமொழி அல்ல.

முக்கியமான மூன்று விடயங்களை மிகவும் இலகுவான நடையில் எவரும் இலகுவாகப் புரியுமாறு ரில்வின் தெரிவித்திருந்ததை கவனிக்கவேண்டும்.

**முதலாவது:** இனப்பிரச்சனைக்குநிலையானஒருமாற்றுத்தீர்வைகண்டுபிடிக்கும் வரைமாகாண சபை முறைமை (கவனிக்கவும் - முறைமை) நீக்கப் படாது என்பது. (அப்படி யானால், 1987 ராஜிவ்-ஜே. ஆர். ஒப்பந்தத்தில் உரு வான மாகாண சபை இனப் பிரச்சனைத் தீர்வுக்காக கொண்டுவரப்பட்டது என்பதை ஜே.வி. பி. ஆரம் பத்திலிருந்தே எதிர்த்து வந்தது என்பதும் இதற்கு மாற்றுத் தீர்வுகாணப் பட வேண்டுமென்று ஜே.வி.பி. தொடர்ந்தும் விரும்புகிறது என்பதும் இங்குபுலனாகிறது)

**இரண்டாவது:** தற்போதுள்ள மாகாண சபை முறைமை இனப் பிரச்னைக்கு சரியான ஒரு தீர்வை உருவாக்கவேண்டுமென்ற ஜே.வி.பி. யின் தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற உதவவில்லையென்று கூறியுள்ளார். (கடந்த ஒன்றேகால் வருடங்களாக மாகாண சபை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் கால அறிக்கைகளை நிறைவேற்ற உதவவில்லை யென்பதே இந்தக் குற்றச்சாட்டு. அப்படியா னால் மாகாணசபைகள் இருப்பதில் என்ன பயன் என்று ரில்வின் சில்வா கேட் பது புரிகிறது).

**மூன்றாவது:** ஒரு சிறந்த மாற்றுத் தீர்வை இதற்குத் தேடும்வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும் எனமிக அழுத்தம் திருத்தமாக ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அதாவது மாற்றுத் தீர்வில் மாகாண சபைகள் இருக்காது என்பது இதனூடாக வெளிப்படையாக புலப்படும் தகவல். (இதுதான் இந்தச் செவ்வியில் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் முத்தாரம் எனலாம்).

இதனைச் சற்று ஆழமாகப் பார்க் கின் 1987 ஒப்பந்த காலத்திலிருந்து விரிந்து செல்ல வேண் டிய பலவற்றை வரி வரியாகக் கூற வேண் டும். ஆனால் அதற்கு இந்தப் பத்திபோ தாது. எனினும், சில வற்றைதொட்டுச் சென்றால் அவற்றை உள்நோக்கலாம்.

1987 ராஜிவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தை வீராவேசமாக எதிர்த்து களமாடியவர்கள் ஜே.வி.பி.யி னர். 1989வரை நீண்டு இத்தொடரில் இடம் பெற்றவன் செயல்கள், தீவைப்புகள், படுகொலைகள் தனி வரலாற்றைக் கொண் டவை. இருநாடுகளின் ஒப்பந்தத்தை எதிர்த்தது என்பது அதில் பிரசவமான மாகாண சபை முறைமையை ஜே.வி.பி. முழுமையாக வெறுத்தது என்பதாகும்.ஆகஜே.வி.பியினர் ஆரம்பத்திலிருந்து மாகாண சபையை எதிர்த்து வந்தனர் என்பது வெளிப்படையானது.

மகிந்தராஜபக்ச ஆட்சியின் போது அவர்களது அநுசரணையோடு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதனூடாக வடக்கு-கிழக்கு மாகாண சபைகள் ஒன்றாக இயங்கமுடியாது தடைசெய்தவர்களும் இவர்களே. எந்தவகையிலும் மாகாண சபைகள் இயங்கக் கூடாதென்பதை தங்கள் அடிப்படைக் கொள்கையாகவே ஜே.வி.பி. செயல்படுத்தி வந்ததென்பது பழங்கதையல்ல.

இவைகளினூடாக அறிந்து புரிந்து தெரிந்து கொள்ளக்கூடியதாக விருப்பது, தேசிய மக்கள் சக்தி அரசின் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் ஜே.வி.பி.யின் செயல்திட்டங்களில் மாகாண சபை என்பது வேண்டப்படாத ஒரு பிள்ளை. இது கருவுற்றபோதே அதனை கருக்கலைப்பு செய்ய 1987ல் இவர்கள் முயன்றனர். ஆனால், அப்போது அது சாத்தியமாகவில்லை. இப்போது அரச இயந்திரத்தை தேர்தல் வழியாக கையேற்று ஜனநாயக வழியாக மாகாண சபையை இல்லாமல் செய்வதே இவர்களது இலக்காக உள்ளது.

இவ்வாறு கூறுவதற்கு முக்கியசான்றாக இருப்பது ரில்வின் சில்வாவின் கூற்றுகள். அதாவது, இனப்பிரச்சனை தீர்வு எட்டும்வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது என்ற இவரது அறிவிப்பில் 'முறைமை' என்ற சொல் சற்றுக் கவனிக்கப்படவேண்டியது. இன்னும் ஆழமாக இச்சொற்பதத்தை ஆய்ந்து பார்க்கையில் மாகாணசபை 'தேர்தல்' நீக்கப்படாது என்று அவர் கூறவில்லையென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மாகாண சபை முறைமை என்பது வேறு, மாகாண சபை தேர்தல் என்பது வேறு. தற்போது ஆளுனர்கள் நிர்வாகத்தில் அவைகள் இயங்குவதே மாகாண சபை முறைமை என்பது.மாகாண சபைகளுக்கு மாற்றுத் தீர்வுகாணப்படும் வரை (அதாவது இல்லாமற் செய்யப்படும் வரை) தற்போதுள்ள ஆளுனர் ஆட்சியின் கீழ் மாகாண சபை முறைமை தொடர்ந்து இயங்கும் என்பதையே 'அந்த முறைமை மாற்றப்படாது' என்று ரில்வின் சில்வா கூறியுள்ளார்.மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமென்று ரில்வின் சில்வாஎங்கும் கூறியதாக இல்லை.

இவர் கூறும் 'முறைமை' என்றசொல்லின் மறைபொருள் என்ன என்பதை புரியாதவர்கள் மாகாண சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடைபெறப் போவதாக எண்ணி, முறைமையையும் தேர்தலையும் ஒன்றாக்கி தேர்தலுக்கு கட்டியம் கூற ஆரம்பித்துள்ளார்கள். இது அரசியல் அறியாமையா, அப்பாவி மக்களை ஏமாற்றும் அரசியல் சுத்துமாத்தா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக் கோட்டைக் கோசம் - 50 ஆண்டுகள்!



யதீந்திரா

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியே பின்னர் அதிலிருந்து விலகிவிட்டது. ஏன் அவ்வாறு விலகியது? ஒன்று அது ஒரு தேர்தல் கவர்சிக்காக முன்வைக்கப்பட்ட கோசமாக இருந்திருக்கவேண்டும் அல்லது தாங்கள் பொருத்தமற்ற கோசமொன்றை முன் வைத்துவிட்டோம் என்றுஅவர்கள் கருதியிருக்கவேண்டும். ஏனெனில் தங்களுடைய நிலைப்பாடு உன்னதமானது தான் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கருதியிருந்தால், எதுவே நடக்காததுபோன்று, சாதாரணமாக மாவட்டசபையை நோக்கி இறங்கியிருக்க மாட்டார்கள். இது அடிப்படையிலேயே செல்வநாயகத்தின் சிந்தனைப் பள்ளியின் அணுகுமுறையாகத்தான் புரிந்துகொள்ள வேண்டும் -அதாவது கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்காதீர்கள் - என்னும் அணுகுமுறை. கேக்கை கேட்டுப் பார்ப்போம் ஆனால் பாண் தான் கிடைக்கின்றது என்றால் அதனை நிராகரிக்கக் கூடாது. இந்த அடிப்படையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையிலிருந்து மாவட்டசபைக்கு இறங்கியது. இது உண்மையில் துரோகம் இல்லைமாறாக அவர்களது அரசியல் அணுகுமுறை. இதனை சரிவரப் புரிந்துகொள்ளாத இளைஞர்கள் அதனை உண்மையென்று நம்பி பல இயக்கங்களாக அணிவகுத்தனர். அன்றைய கூட்டணியின் அணுகுமுறையின் தொடர்ச்சிதான் இன்றும் தேர்தல் என்றவுடன் சில கோசங்களை முன்வைப்பதும், பின்னர் அவ்வாறானதொரு கோரிக்கையை, நாங்களாமுன்வைத்தோம் -என்பது போல், சம்மந்தமில்லாமல் இருப்பதையும் ஒப்பிட்டுக் கொள்ள லாம். இதுபற்றி இன்றைய இளைய தலைமுறை இனியாவது சிந்திக்கவேண் டும்.

இந்த ஐம்பதுஆண்டுகளை திரும்பிப் பார்த்தால் ஒரு வேளை இந்தப் போராட்டமே நடந்திருக்காவிட்டால், ஈழத் தமிழ் மக்கள் முக்கியமாகஏழைத் தமிழ் மக்கள் சிறப்பானதொருவாழ்வில் இருந்திருப்பார்களோ என்னும் கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதது-ஏனெனில் இந்த ஐம்பதுஆண்டுகளில் வடக்குகிழக்கில் எவ்வாறானசாதகமானஅரசியல் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. வடக்குகிழக்கில் தமிழ் மக்களின் இருப்பை பலப்படுத்துவதில் ஜனநாயக அரசியலும் சரி, ஆயுதப் போராட்டமும் சரி, சாதகமான பங்களிப்பை வழங்கவில்லை.

இது தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இன்றி, மீண்டும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் பேசுவதும், அதுதொடர்பில் பிரகடனங்களை மேற்கொள்வதும் எந்தவகையில் நேர்மையானது. சிலவருடங்களுக்குமுன்னர் தமிழ் நாட்டில் வாழ்ந்துவரும் காசிஆனந்தன் என்பவர் திடிரென்று, இரண்டாம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று ஒரு நகைச்சுவைக் கதையை முன்வைத்திருந்தார். இதனைகண்டிக்கவேண்டியதமிழ் கட்சிகளோ, புத்திஜீவிகளோ தலையாட்டிக் கொண்டிருந்தனர். இப்போதுமீண்டும் ஒரு குழு வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் முகம் காட்டமுற்படுகின்றது. இப்போதும் வழமைபோல் தமிழ் கட்சிகள், புத்திஜீவிகள் என்பேரர் பொம்மைகளாகவே இருக்கின்றனர்.

எந்தவொரு விடயத்தை பற்றிபேசுவதற்குமுன்னர் முதலில் நமது அரசியல் தகுதிநிலை தொடர்பில் சிந்திக்கவேண்டும்.நமது தகுதிநிலை அறிந்தால் தான் மற்றவர்களுக்கு முன்னால் நாம் என்ன நி லையில் இருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் தமிழ் அரசியல் சூழலில் இடம்பெறும் உரையாடல்களில் இந்த இரண்டையும் காணவில்லை. எவர் எதனை குறிப்பிட்டாலும் அதுதொடர்பில் கேள்விகளை முன்வைக்காமல் தலையாட்டும் போக்கேமேலோங்கிக் காணப்படுகின்றது. அதனையே அறிவுபூர்வமான நிலைப்பாடுஎன்று கூறிக் கொள்வதுதான் இன்னும் மோசமானது.

இன்று தமிழர் அரசியல் இருக்கும் நிலைமையையும், அன்றிருந்த நிலைமையையும் சிறிதுநோக்குவோம்.ஒப்பீட்டடிப்படையில் அன்றைய அரசியல் சூழலில் தமிழருக்கு ஒரு குரல் இருந்தது. செல்வநாயகம் சரியோ பிழையோ தென்னிலங்கையுடன் பேசக் கூடிய ஒருவராக இருந்தார். அவருடன் உடன்பட்டார்களோஅல்லது இல்லையோ தமிழர்களின் தலைவர்கள் என்னு மடிப்படையில் அவர்கள் மதிக்கப்பட்டனர். அதன் பின்னர் அமிர்தலிங்கம் இந்தியப் பிரதமரோடு பேசக் கூடிய ஒருவராக இருந்தார். இந்தியாவில் மதிக்கப்பட்டார்.தென்னிலங்கையும் அமிர்தலிங்கத்தை உற்றுநோக்கியது. அவ்வாறானதொரு சூழலில் கூட சில விடயங்களை வெற்றி கொள்ளமுடியவில்லை. ஏன்? ஏனெனில் தென்னிலங்கைக்கு நிர்பந்தத்தை கொடுக்கக் கூடிய அரசியல் பலத்துடன் அவர்கள் இருக்கவில்லை- இருக்கமுடியவில்லை.


இவ்வாறானதொரு பின்னணியில் தான் ஆயுதப் போராட்டம் ஈழத் தமிழர்களின் பேரம் பேசுவதற்கானது ருப்புச் சீட்டானது. அதன் சரி பிழைகளை ஒருபக்கமாக வைத்துவிட்டு நோக்கினால் தமிழ் இளைஞர்களின் ஆயுத ரீதியான எழுச்சி தென்னிலங்கைக்கு ஒரு நெருக்கடியாக மாறியது. அதுவே பின்னர் இந்தியத் தலையீட்டுக்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. இந்தியாஅதன் நலன்களில் இருந்துதான் தலையிட்டது.ஒரு பிராந்திய சக்தி அவ்வாறுதான் தலையிடும். பலமான நாடுகளின் தீர்மானங்கள் தொண்டுமனோ நிலையிலிருந்து பிறப்பதில்லை. அவ்வாறு எவரேனும் நம்பினால் அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாது என்றுபொருள்.குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வெளிவிவகாரக் கொள்கையின் விளைவாகவே இந்தியாவின் அன்றையநேரடித் தலையீடு நிகழ்ந்தது. அன்றைய உலக அரசியல் நிலைமையும் அதற்கான சூழலை வேகமாகக் கனியச் செய்திருந்தது. ஆனால் ஒரு மூன்றாம் தரப்பின் தலையீடு நிகழ்ந்த போதும் கூட, அதனை உச்சபட்டசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை, தமிழ் அரசியல் தலைமைகள் தவறுவிட்டன.

இந்தியாவின் நேரடியான தலையீடு தோல்வியுற்ற பின்னரான அரசியல் காலகட்டம் என்பது முற்றிலுமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் காலகட்டம் மட்டுமே. இந்தக் காலத்தில்,புலிகள் அவர்களது நகர்வில் வெற்றிபெற்றிருந்தால் அந்தவெற்றிக்கு அவர்கள் மட்டும் தான் காரணம். ஆனால் அவர்களது அனைத்து முயற்சிகளும் இறுதியில் தோல்வியிலேயே முடிவுற்றது. இப்போது அந்தத் தோல்விக்கு வேறு ஒருவர் மீது விரல் நீட்டமுடியாது அல்லவா!

வட்டுக்கோட்டைத் தீமானத்தின் ஐம்பது ஆண்டுகள் என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும்? ஜனநாயக வழியிலான போராட்டம், ஆயுத வழியிலான போராட்டம்,போர்த் தோல்விக்கு பின்னரான நீதிதேடும் செயல்பாடுகள், சர்வதேசத்தைநோக்கியகோசங்கள் - அனைத்தும் தோல்வியில் முடிவுற்றிருக்கும் ஐந்து தசாப்தங்களை நாம் கடந்திருக்கின்றோம். இது தொடர்பில் எவ்வித பரிசீலனையும் இன்றி, மீண்டும் நாம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் பேசலாமா?

இந்த இடத்தில் தான் நான் மேலே குறிப்பிட்ட அரசியல் தகுதிநிலை என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அரசியலில் ஒன்றை அடைய வேண்டும் என்றால் மற்றவர்களுடன் பேரம் பேசுவதற்கான பலம் நமக்கு இருக்கவேண்டும்.அவ்வாறுபேரம் பேசாமல் ஒன்றைபெறவேண்டும் என்றால் அதுமற்றவர்களின் கருணையினால் மட்டுமே நிகழமுடியும். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் தரப்புக்கள் கோரும் ஒரு அரசியல் தீர்வை நிராகரிக்கின்றனர்.ஆட்சிக்கு வருவ தற்கு முன்னர் சில விட யங்களை செய்வதாகக் கூறுகின்றனர் ஆனால் வந்தவுடன் அதனை புறம் தள்ளுகின்றனர். இதுதான் தென்னிலங்கை அரசியலின் வாழையடிவாழையாகத் தொடர்கின்றது. அவர்கள் தரமறுப்பதை நாங் கள் பெறஎன்ன வழி? ஒன்றில் பலம் இருக்க வேண்டும் அல்லதுஒரு மூன்றாம் தரப்பு நமக் காக களத்தில் நிற்கவேண் டும். அதுவும் சாத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தநிலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உச்சரித்துவிட்டு, கைவிடப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றிபேசுவ தால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எவ்வாறான நிர்பந்தத்தை வழங்கமுடியும்?

இந்த ஐம்பது வருடங்களை திரும்பிப் பார்த்தால் ஈழத் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றில்லை- கிடைத்தது ஆனால் அதனை திறம்பட, புத்திசாதுர்யமாக கையாளுவதில் தமிழ் தலைமைகள் என்போரால் வெற்றிபெறமுடியவில்லை. இதனால்தான் ஐம்பது ஆண்டுகள் என்பதுதோல்வியின் ஆண்டுகளாக இருக்கின்றன. இனியும் தொடர்ந்தும் தோல்வியின் பாதையில் பயணிப்பதா அல்லது கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, புதிய வாய்ப்புக்களை கையாளும் தகுதியை வளர்த்துக் கொள்வதா? காலம் எப்போதும் ஒரேநேர் கோட்டியில் பயணிப்பதில்லை. ஆனால் அந்தகாலவோட்டத்தோடுஒத்தோடுவதற்குசதாதங்களைதயார் செய்துகொண்டிருக்கும் தலைமைஅவசியம்.



“இந்த ஐம்பது வருடங்களை திரும்பிப் பார்த்தால் ஈழத் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றில்லை - கிடைத்தது ஆனால் அதனை திறம்பட, புத்திசாதுர்யமாக கையாளுவதில் தமிழ் தலைமைகள் என்போரால் வெற்றிபெற முடியவில்லை. இதனால்தான் ஐம்பது ஆண்டுகள் என்பது தோல்வியின் ஆண்டுகளாக இருக்கின்றன.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தூஷணம்



நிலாந்தன்

அண்மையில் சுமந்திரனின் பிறந்த நாள் அன்று ஒரு பெண் அரசியல் செயல்பாட்டாளர், சுமந்திரனுக்கு விசுவாசமானவர், முகநூலில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அதில் அவர "உன்னுடைய எதிரி யாரைக் கண்டு பயப்படுகிறானோ, அவன்தான் உனக்குத் தலைவர்" என்ற பொருள்பட எழுதி வாழ்த்தியிருந்தார்.

அவர் அவ்வாறு எழுதியதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவ்வாறு வாழ்த்த அவருக்கு உரிமை உண்டு. அதேசமயம் அதற்கு எதிராக எழுத மற்றவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் அதற்கு ஒரு பண்பாட்டு எல்லைக் கோடு உண்டு. தனது தாய்க்கு எதிராக, சகோதரிக்கு எதிராக, மனைவி அல்லது காதலிக்கு எதிராக மற்றவர்கள் எதை எழுதக்கூடாது என்று ஒருவர் எதிர்பார்க்கிறாரோ, அதை அவரும் இன்னொரு பெண்ணுக்கு எதிராக எழுதக் கூடாது. இதுதான் பண்பாட்டு எல்லைக்கோடு.

ஆனால் அந்தப் பெண் மீது கொட்டப்பட்ட தூஷணத்தை, விஷத்தை தொகுத்து பார்த்தால் அவை தமிழ்த் தேசிய பண்பாட்டு இதயத்தின் செழிப்பைக் காட்டவில்லை. சீரழிவைத்தான் காட்டின. அவர் ஒரு குடும்பப் பெண். பொது வாழ்வுக்கு வந்துவிட்டார் என்பதற்காக அவரைக் கண்டபடி தாக்கினார்கள். ஆனால் தேசியவாத அரசியல் என்பது பாலியல் சமத்துவத்தின் மீதுதான் கட்டி எழுப்பப்படுவது. சகபாலரை மதிக்கத் தெரியாத ஒருவர் சகபாலரை அந்த தேசிய ஆன்மாவின் பண்பாட்டு எல்லைகளைத் தாண்டி விமர்சிக்கும் ஒருவர், தன்னைத் தேசியவாதி என்று கூறிக்கொள்ள முடியாது.

அப்படியானால் அந்தப் பெண் தனக்கு எதிராக தூஷணத்தைக் கக்கிய நபர்களுக்கு எதிராக நிகழ் நிலை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாமா?அதுபோன்ற அவதூறுகளுக்கு எதிராகத்தான் சாணக்கியன் நிகழ் நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்தவரா?

தமிழரசுக் கட்சி நிகழ் நிலைப் பாதுகாப்புச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சுமந்திரன் அதற்கு எதிராக கருத்து தெரிவித்திருக்கிறார். ஏன் சாணக்கியனே நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால் இப்பொழுது தன்னை அவதூறு செய்தவர்களுக்கு எதிராக அந்த சட்டத்தின் கீழ் வழக்கு தொடுத்திருக்கிறார். இதில் ஓர் அக முரண்பாடு உண்டு. இது தொடர்பாக தமிழரசுக் கட்சி தன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.


மேலும், சாணக்கியன் நாடாளுமன்றத்தை உட்கட்சி முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் மேடையாகப் பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கடந்த வாரம் நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளை ஒரு பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தி அவர் தெரிவித்த கருத்துக்கள் எந்த வகை அரசியல் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை?

இடதுசாரிகள் முரண்பாடுகளைக் கையாளும்போது "நேச முரண்பாடு பகை முரண்பாடு" என்று பிரிப்பார்கள். தாய்ப் பூனை இரையைக் கவ்வுவதற்கும் குட்டியை கவ்வுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்று அதை விளங்கப்படுத்துவார்கள். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் நாடாளுமன்றத்தில் உட்கட்சிச் சண்டைகளைப் பேசுகிறார்கள். உட்கட்சி முரண்பாடுகளை வழக்குகளின் மூலம் கையாளப் பாக்கிறார்கள். சட்ட நடவடிக்கை என்ற விடயத்தை தமது அரசியல் எதிரிகளுக்கும் தம்மை விமர்சிப்பவர்களுக்கும் எதிரான ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் அரசியல்வாதி ஒருவருக்கு எதிரான அவதூறு எனப்படுவது இப்போதுள்ள தமிழ்த் தேசிய அரசியல் சூழலில், ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அதை விட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் பண்பாட்டு பிரச்சினை.

தமிழ் தேசிய அரசியல் விமர்சன பாரம்பரியத்தின் சீரழிவை இது காட்டுகின்றது. இதை இன்னும் ஆழமான வார்த்தைகளில் சொன்னால், தமிழ் தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் நோய்க்கூறானதாக மாறி வருகிறது என்பதனை அது காட்டுகிறது.

பெண்கள் அல்லது தனிப்பட்ட முறையில் அவமானப்படத் தயாராக இல்லாதவர்கள் தமது பொதுவாழ்வுக்காக தமது நிம்மதியைத் தொலைக்கத் தயாராக இல்லாதவர்கள் போன்ற பலரும் அரசியலில் ஈடுபடத் தயங்குவதற்கு இது ஒரு பிரதான காரணம்.



**சாணக்கியன் நாடாளுமன்றத்தை உட்கட்சி முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் மேடையாகப் பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கடந்தவாரம் நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளை ஒரு பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தி அவர் தெரிவித்த கருத்துக்கள் எந்தவகை அரசியல் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை?**




தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டிக்குப் பின்னரான கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இந்தப் போக்கு மேலும் அதிகரித்து வருகிறது.

கடந்த 16 ஆண்டுகால தமிழ்த் தேசியக் கூட்டு உளவியல் என்பது கொந்தளிப்பானது. அவமானகரமான ஒரு கூட்டுத் தோல்விக்கும் கூட்டு இழப்புக்கும் கூட்டுக் காயங்களுக்கும் பின்னரான கூட்டு உளவியலானது கொந்தளிப்பானதாகத்தான் இருக்கும். அது யாரையும் நம்பாது. யாராவது சமூகத்தில் மினுங்கிக் கொண்டு வந்தால் அவரை எச்சரிக்கை உணர்வோடு அல்லது எரிச்சலோடு பார்க்கும். யாரையாவது தாக்க நினைத்தால் அவரை எங்கே தாக்கினால் வலிக்குமோ அங்கே தாக்கும். சமூக வலைத்தளங்களின் சுதந்திரச் சூழல் அதற்கு இடம் கொடுக்கின்றது. சமூக வலைத்தளங்களின் எழுச்சியோடு ஒருபுறம் குரலற்ற மக்களுக்கு குரல் கொடுக்க இடம் கிடைத்திருக்கிறது. அதேசமயம் வெறுப்பவர்களை, விஷம் கக்கிகளை, தூஷணம் கொட்டிகளை, பொது வெளியில் கழியும் வெறுப்பர்களை அது பரவலாகியுள்ளது. குழுக்கள் ஆக்கியுள்ளது.

இந்தப் போக்கு கடந்த 16 ஆண்டுகளாகதான் இருந்து வருகிறது என்பதல்ல. ஆயுதப் போராட்டத்திலும் இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலில் அதிகமாக சூழ்ச்சி கோட்பாடுகள் உற்பத்தி செய்யப்பட்ட காலகட்டம் அதுதான். விமர்சனங்கள் துப்பாக்கி முனையில் அல்லது பச்சை மட்டைகளால் தீர்க்கப்பட்டதுண்டு.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான மிதவாத அரசியலிலும் அது இருந்தது. கொள்கை எதிரிகளை துரோகிகள் ஆக்குவது அல்லது காசுக் கள்ளர்கள் ஆக்குவது பாலியல் குற்றவாளிகளாகச் சித்தரிப்பது அவர்களுடைய அந்தரங்கத்தை மறைமுகமாகப் பேசுவது அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை அருவருப்பான உவமைகளுக்கு ஊடாகக் கூறுவது... போன்றன அங்கேயும் இருந்தன. அதிலும் குறிப்பாக அங்கே மல முட்டிப் பாரம்பரியம் இருந்தது. தனது கட்சி எதிரியின் வீட்டு முற்றத்தில் மலம் நிரம்பிய மண் முட்டியைக் கொண்டு போய் உடைத்து விடுவது. அதே மல முட்டிகளோடு, மொட்டை கடிதங்களோடு, முகமூடிகளோடு ஒரு பகுதியினர் இப்பொழுது சமூக வலைத்தளங்களில் வெறுப்பை, விஷத்தைக் கக்கியபடி திரிகிறார்கள்.

இவர்கள் மத்தியில் படித்தவர்கள் உண்டு லோயர்கள் உண்டு மருத்துவர்கள் உண்டு ஆசிரியர்கள் உண்டு அரசியல் செயற்பாட்டாளர்கள் உண்டு கட்சிகளில் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள் உண்டு தலை முழுக்க நரைத்த வயது போனவர்கள் உண்டு. ஆனால் ஒரு நல்ல விடயம் பெண்கள் இதில் குறைவு.

இது அரசியல்வாதிகள் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் மட்டுமல்ல, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் உண்டு. படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், அறிவு ஜீவிகள் மத்தியிலும் உண்டு.

இலக்கியவாதிகள் தங்களுக்கு இடையே மோதும்போது எதிர்த் தரப்பின் இடுப்புக்கு கீழே அடிப்பது என்பது நீண்ட காலமாக இருந்து வருகிறது. யாருக்கு எங்கே அடித்தால் அதிகம் வலிக்குமோ அந்த உயிர் நிலையில் அடிப்பது. அதாவது பிறப்பு உறுப்பில் அடிப்பது. அல்லது பிறப்பு உறுப்போடு சம்பந்தப்பட்ட விடையங்களை, உறவுகளைத் தாக்குவது.

தமிழ் மக்கள், அரசாங்கத்தை பொறுப்புக் கூற வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் பொது வெளியில் துருத்திக் கொண்டு தெரியும் பலரும் எதிர்த் தரப்பை விமர்சிக்கும் போது தமது மூப்பை, படிப்பை, சமூகப் பொறுப்பை, தமது மதத்தின் வழியாக தாங்கள் கற்றுக்கொண்ட அறத்தை ஒழுக்கத்தைப் பிரதிபலிக்கும் வார்த்தைகளை ஏன் பயன்படுத்துவதில்லை?


தாங்கள் சமூக வலைத்தளங்களில் எழுதுகின்ற அல்லது தங்களுடைய குருட்டு விசுவாசிகளை ஏவி எழுதுகின்ற விடியங்களை தங்களுடைய பெற்றோர் தங்களுக்கு ஏடு தொடங்கியவர், ஞானஸ்தானம் கொடுத்தவர், தங்களுடைய மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பார்த்தால் தங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பண்பாட்டுக் கூச்சம், பொறுப்பு இவர்களுக்கு ஏன் இல்லாமல் போனது?

இது ஒரு கூட்டு உளவியல் நோயாக பெருகி வருகிறது. இதை மருத்துவர்கள் மட்டும் குணப்படுத்த முடியாது. சட்ட நடவடிக்கைகளால் மட்டும் தீர்த்து விட முடியாது. பதிலாக இது ஒரு பண்பாட்டுப் பிரச்னை. ஒரு கூட்டுப் பிரச்னையை கூட்டாகத்தான் தீர்க்க வேண்டும். ஆனால் துயரம் என்னவென்றால் அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களே அதாவது அரசியல்வாதிகளே இந்தப் பண்பாட்டுச் சீரழிவுக்கு முக்கிய பொறுப்பு என்பதுதான்.

ஈழத்தமிழ் அரசியல் பரப்பில் மட்டுமல்ல, உலகப்பரப்பில், உலகப் பேரரசு அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப் எப்படித் தோன்றுகிறார்? என்ன பேசுகிறார்? அண்மை ஆண்டுகளில் உலகில் அதிகம் விமர்சிக்கப்பட்டவர் அவர்தான். உலகம் பூராகவும் அவருக்கு எதிராக மீம்ஸ்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக கடந்த இரண்டு கிழமைகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் போரில் அவர் ஒரு கொடிய "கொமெடி பீஸ்" ஆக உருவகிக்கப்படுகிறார். மீம்ஸ் உருவாக்கிகள் அவருடைய மகனுக்கும் வட கொரியத் தலைவரின் மகளுக்கும் திருமணம் செய்து வைத்துப் பிள்ளையும் பெற்றுக் கொடுத்து விட்டார்கள். இவ்வாறு உலகப் பரப்பில் தன்னையும் தனது குடும்பத்தையும் அவதூறு செய்யும் சமூக வலைத்தளப் பாவனையாளர்களுக்கு எதிராக அவர் என்ன செய்யலாம் என்று நமது அரசியல்வாதிகளிடம் ஆலோசனை கேட்டால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கான தனது ஒற்றைத்தலைமைக்கு அமெரிக்கா தானே புதைகுழியைத் தோண்டுகிறதா?



- கந்தையா அருந்தவபாலன்

உலக அரசியல் வரலாற்றில் நாடுகளுக்கிடையிலான அதிகார ஒழுங்குமுறை தொடக்கத்தில் பல்முனைப்பட்டதொன்றாகவே இருந்தது. பின்னர் பேரரசுகளின் எழுச்சியுடன் அந்த பல்முனை அதிகார ஒழுங்குமுறை மெல்ல மெல்லச் சுருங்கத்தொடங்கியது. அதன் அடுத்த கட்டமாக அப்பல்முனை உலக அதிகாரம் இருமுனை கொண்டதாக மாறியது. ஒருபுறத்தில் அமெரிக்கா தலைமையில் மேற்குலகமும் மறுபுறத்தில் சோவியத் ஒன்றியத்தின் தலைமையின் கீழ் அப்போதைய பொதுவுடமை நாடுகளும் எதிரெதிர் அணிகளாக செயற்பட்டு வந்தன. இந்த இரண்டு அணிகளையும் சாராதவையாக அல்லது இரண்டு அணிகளுக்கும் வேண்டியவர்களாக ஏனைய பல நாடுகள் இருந்து வந்தன. அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலான பனிப்போர் முடிவுறும் வரையில்,அதாவது சோவியத் ஒன்றியம் என்ற 15 நாடுகளைக் கொண்ட ஆட்சிக்கட்டமைப்பு 1991 இல் உடையும்வரை இந்த இருமுனை அதிகார ஒழுங்குமுறை நிலவிவந்தது. இந்த முறையின்கீழ் உலக அரசியல் அதிகாரச் சமநிலை தற்போதைய நிலையைவிட உயர்ந்தமட்டத்தில் இருந்துவந்ததாகக் கருதப்படுகிறது.

சோவியத் ஒன்றியத்தின் உடைவைத் தொடர்ந்து உலக ஒழுங்கைத் தீர்மானிக்கின்ற ஒற்றைத் தலைமையாக அமெரிக்கா உருவெடுத்து இன்றவரை அதனை தக்கவைத்து வருகிறது. எனினும் சர்வதேச சட்டங்களையும் தார்மீக கடப்பாடுகளையும் மதிக்காத அமெரிக்காவின் தன்னிச்சையான நடவடிக்கைகள், நாடுகள்மீதான அதன் அதிகாரத்திணிப்புகள், பக்கச்சார்பு, வளச்சுரண்டல்களுக்கான அதீத ஆசை போன்றனவும் மறுபுறத்தில் சீனா, ரஸ்யா மற்றும் பிராந்திய அடிப்படையில் வேறுசில நாடுகளின் வளர்ச்சியும் எழுச்சியும் அமெரிக்காவின் ஒற்றைத்தலைமை தொடர்பாக பல சவால்களை அண்மைக்காலத்தில் உருவாக்கத் தொடங்கிவிட்டன. சீனாவின் விரைவான வளர்ச்சி, சீன- ரஸ்யக் கூட்டு, பொருளாதார உதவிகள் மூலம் சீனா வளர்ந்துவரும் நாடுகளைத் தம்வசப்படுத்தி வருதல், பிரிக்ஸ் கட்டமைப்பின் உருவாக்கமும் வளர்ச்சியும், டொலருக்கு மாற்றான நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற பலகாரணிகள் அமெரிக்காவின் ஒற்றைத்தலைமையைப் படிப்படியாக கரைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான ஒருநிலையில் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகள் அமெரிக்காவின் ஒற்றைத்தலைமைக்கு மேலும் ஊறுவிளைவிப்பதாகக் கருதப்படுகிறது. இறுதியாக ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேல் கூட்டின் வலிந்த போர்த்தொடுப்பும் அப்போரின் தற்போதைய பரிமாணங்களும் அமெரிக்காவின் ஒற்றைத் தலைமைக்கு சாவுமணி அடிக்கக்கூடும் என்ற கருத்து மேலோங்கி வருவதைக் காணமுடிகிறது.

அமெரிக்காவின் ஒற்றைத் தலைமைக்குப் பலகாரணிகள் ஆதாரமாக அமைகின்றன. அவற்றுள் மிகமுக்கியமான காரணிகளாக மூன்று விடயங்கள் அமைந்துள்ளதாக கனடாவின் ரொரொன்றோ பல்கலைக்கழகப் பேராசியரும் சுவீடிஷ்-எதியோப்பிய அரசியல் ஆய்வாளருமான காலா நொர்லொவ் குறிப்பிடுகிறார். அக்காரணிளாவன, ஒன்று அமெரிக்காவின் பொரளாதார பலம், இரண்டாவது படைத்துறைப் பலம், மூன்றாவது டொலரின் ஆதிக்கம். பொருளாதார ரீதியாகவும் படைத்துறை ரீதியாகவும் அமெரிக்கா முலிடத்தில் இருந்துவருகிறது. அமெரிக்காவின் மொத்த உற்பத்தி 30 ட்றில்லியன் டொலர்களாகும். அந்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கும் சீனாவின் மொத்த உற்பத்தியை (19.4 ட்றில்லியன்) விட 1:3 பங்கு கூடுதலாக உள்ளது. அதேபோலவே படைத்துறை வலிமையிலும் சீனா உட்பட முக்கிய நாடுகளைவிட உயர்ந்த நிலையில் அமெரிக்கா உள்ளது. படைத்துறைக்கான செலவு, ஆளணி, தொழில்நுட்பம், தரை, கடல், வான் ஆயுத தளபாடங்கள் உட்பட 60 விடயங்களை உள்ளடக்கிய படைத்துறை வலிமைச் சுட்டெண் 79 புள்ளிகளுடன் அமெரிக்கா முதலிடத்தை வகிக்கிறது. இதற்கு மேலாக அமெரிக்க நாணயமான டொலரின் உலகளாவிய ஆதிக்கம். டொலர் அமெரிக்க நாணயமாக மட்டுமன்றி உலக நாடுகளின் பரிமாற்ற நாணயமாகவும் தங்கத்துக்கு ஈடான ஒதுக்கச் சொத்தாகவும் இருந்து வருகிறது.

இவற்றுக்கு மேலாக தனது ஒற்றைத்தலைமையைப் பேணுவதற்கான இராஜதந்திர அணுகுமுறைகளையும் நிறுவனக்கட்டமைப்புகளையும் அது கையாண்டுவருகிறது. தனது தலமைக்கும் ஆதிக்கத்துக்கும் எதிராக எழும் எந்தவொரு சவாலையும் அது பலவழிகளில் முறியடித்து வருகிறது. சோவியத் ஒன்றியத்தின் உடைவை ஊக்குவித்தது தொடக்கம் இன்றைய ஈரான் மீதான போர்வரை அனைத்து நடவடிக்கைகளும் அவ்வாறான நோக்கத்தின் அடிப்படையில் அமைந்தவையே. இப்போர் வெறுமனே அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகளுக்கிடயிலான இராணுவ மோதலன்று. இதன் பின்னால் அந்நாடுகளுக்கு பல்வேறு நீண்டகால நோக்கங்கள் உண்டு. அதுமட்டுமன்றி ஈரானுக்கு ஆதரவாக உள்ள சீனா, ரஸ்யா போன்றவற்றுக்கும் உண்டு.

அதேபோலவே அமெரிக்கா ஐ.நா உட்பட பலமுக்கிய உலக நிறுவனங்களுக்கு அதிகளவு நிதி வழங்குவன் மூலம் அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து தனக்குச் சார்பான தீர்மானங்கள் மற்றும் கருத்துருவாக்கங்களின் மூலம் தனக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்கிறது. இதன்மூலம் அந்நாடு தான் நினைத்தவாறு நாடுகளுக்கு எதிராக தொடர்ந்து மேற்கொண்டுவரும் பொருளாதாரத் தடைகள், யுத்தம் போன்ற எதேச்சதிகார நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருவதையும் அவதானிக்க முடியும். எனினும் உலகில் ஏற்பட்டுவரும் அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப, படைத்துறை மாற்றங்கள் இந்த நிலைமையைப் படிப்படியாக மாற்றி வருவதுடன் அமெரிக்காவின் ஒற்றைத்தலைமைத்துவம் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற கேள்வியையும் தோற்றிவித்து வருகிறது.

> **அமெரிக்கா உலக நாடுகள் மீதான தனது இன்றைய ஏகபோகத்தை படிப்படிப்படியாக இழக்க நேரிடலாம். எனினும் பதவியிலுள்ள சாதாரண நபர்கூட அதைவிட்டுவிட ஒருபோதும் விரும்புவதில்லை. அவ்வாறெனில் அமெரிக்காவுக்கு அது எப்படியிருக்கும்? என்பதை ஊகிப்பது கடினமன்று. அந்தவகையில் அது உலகில் இன்னொருவகைப் போராட்டமாக மாறக்கூடும்.**

இதில் குறிப்பிடத்தக்க சவால் சீனாவின் பக்கமிருந்து தோன்றியுள்ளது. சீனா பொருளாதார ரீதியாக வேகமாக முன்னேறி வருவதுடன் தொழில்நுட்பம் மற்றும் படைத்துறை வலிமை போன்றவற்றில் அமெரிக்காவுக்கு ஈடுகொடுக்கும் நிலையில், சில துறைகளில் அமெரிக்காவை விஞ்சும் நிலையிலும் உள்ளது. மொத்த உற்பத்தியில் சீனா அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் இருப்பதுடன் அதன் பொருளாதார வளர்ச்சிவீதம் (5.0) அமெரிக்கவை (2.1) இருமடங்கை விட உயர்வானது. பன்னாட்டு வர்த்தகத்தில் சீனா (3.4-3.4 ட்றில்லியன்) அமெரிக்காவை (1.6-2.0 ட்றில்லியன்) விட ஒருமடங்கு முன்னிலையில் உள்ளது. அத்துடன் உலகில் பன்னாட்டு வர்த்தகத்தில் மிகை அனுபவிக்கும் ஒரேயொரு நாடாக சீனா உள்ளது. அதற்குமேலாக அமெரிக்காவின் பொதுப்படு கடன் 38 ட்றில்லியன் டொலருக்கும் கூடுதலாக (மொத்த உற்பத்தி 19.4 ட்றில்லியன்) இருக்க சீனாவின் பொதுப்படுகடன் 2 ட்றில்லியனுக்கும் குறைவாக உள்ளது. படைத்துறை வலிமைச்சுட்டெண்ணில் அமெரிக்கவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வேறுபாடு வெறும் 5 புள்ளிகள் மட்டுமே. டொலரின் ஆதிக்கத்தை குறைக்கும் வகையில் சீனா தனது யுவான் நாணயத்தின் பரிமாற்றத்தை விரிவுபடுத்தி வருவதுடன் எண்ணிம நாணயத்தையும் கையாண்டு வருகிறது.


அதேவேளை படைத்துறை வலிமையில் உலகில் மூன்றாம் நிலையில் இருக்கும் ரஸ்யாவுடன் நெருங்கிய கூட்டை ஏற்படுத்தியுள்ளதுடன் பிராந்திய ரீதியில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளை ஒன்றிணைத்து 'பிரிக்ஸ்' கட்டமைப்பையும் ஏற்படுத்தி வருகிறது. இக்கட்டமைப்பினூடாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கிவரும் உலக நிதிநிறுவனங்களுக்குப் பதிலீடான நிறுவனங்களை உருவாக்கிப் பலப்படுத்துவதிலும் சீனா முனைப்புக்காட்டி வருகிறது. ஈரான் மீதான இன்றைய போருக்கான முக்கிய காரணிகளில் இதுவும் ஒன்று. இப்போரின் மூலம் சீனாவின் இந்த முனைப்பை மழுங்கடிக்கச் செய்வது அமெரிக்காவின் ஒரு நோக்கமாக இருக்க, சீனாவின் ஈரானுக்கான ஆதரவு அது தனது நோக்கத்தை வலுப்பெறச் செய்வதற்கானதாக உள்ளது.

ஒருபுறத்தில் சீனாவுடன் அணிசேர்வதிலும் நட்புக்கொள்வதிலும் உலக நாடுகளின் விருப்பம் படிப்படியாக விரிவடைந்து வரும் அதேவேளை மறுபுறத்தில் அமெரிக்காவுக்கும் அதன் நெருங்கிய கூட்டாளிகளுக்கிடையிலான விரிசல் படிப்படியாகக் கூடிவருவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக நேட்டோ கூட்டணியில் உள்ள நாடுகளே இன்று ட்ரம்பின் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்பதையும் ஒத்துழைக்க மறுப்பதையும் காணலாம். ட்ரம்பின் அண்மைக்கால வரிவிதிப்புகள், ஆக்கிரமிப்புப் பேச்சுகள் போன்றவற்றின் மூலம் இந்நாடுகளிடையே தோன்றிய வெடிப்பு ஈரான்மீதான போரில் வெளிப்படையாக காட்சி வருவதை அவதானிக்கலாம். அதேவேளை அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளிகள் பொருளாதார ரீதியாக சீனாவுடன் நெருக்கமடைய ஆர்வம் காட்டி வருகின்றன. பனிப்போர் காலம்போல இன்று முதலாளித்துவம், பொதுவுடமை என்ற தத்துவவேறுபாடுகள் எதுவும் கிடையாது. இன்று எல்லா நாடுகளும் சந்தைப் பொருளாதார நாடுகள்தான். அதுமட்டுமல்ல இன்று அரசியலைவிட நாடுகளுக்கு பொருளாதார தேவைகளே முக்கியமானது. ஓடுற குதிரைமீது காசு கட்டவிரும்புவதுதான் மனித இயல்பு. இது நாடுகளுக்கும் பொருந்தும். உலக ஒழுங்கில் ஏற்பட்டுவரும் மாற்றத்தையும் எதிர்காலத்தில் எவ்வாறு அது அமையக்கூடும் என்பதையும் கணிப்பிடுவது இந்நாடுகளுக்கொன்றும் கடினமான விடயங்களல்ல.

உலகின் இத்தகைய பரிணாமப் போக்கில் ஈரான் மீதான யுத்தம் பலவிடயங்களில் திருப்பு முனையாக இருப்பதைக்காண முடியும். அமெரிக்க இஸ்ரேல் நாடுகளின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனதுடன் ஈரானின் பதில்தாக்குதலும் நின்றுபிடிக்கும் திறனும் உலகுக்குப் பலசெய்திகளைச் சொல்லிவருகிறது. அமெரிக்காவுக்கு எதிரான அணி பலம்பெறுவது, அமெரிக்காவின் நேசநாடுகள் ஒதுங்கிநிற்க விரும்புதல் மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகள் அமெரிக்காவிடமிருந்து விடபட எண்ணங்கொள்ளல் போன்ற மாற்றங்களை இந்த யுத்தம் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அமெரிக்காவின் படைத்துறை வலிமை தொடர்பாகவும் கேள்வியேற்படுத்தப்படுகிறது. அதுமட்டுமன்றி முன்னர் ஒருசில நாடுகள் மட்டுமே கொண்டிருந்த அணுநுட்பம் இன்று பலநாடுகளின் கைகளிலும் பரந்துள்ளது. பெட்ரோ டொலர் உடன்படிக்கை தொடருமா அல்லது முறியுமா என்பதை இந்தப் போர் தீர்மானிக்க் கூடும். அதேபோலவே சீன,ரஸ்ய கூட்டும் பிரிக்ஸ் கட்டமைப்பும் மேலும் வலுப்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்தியா போன்ற சில நாடுகள் பிரிக்ஸ் கட்டமைப்பில் இருந்தாலும் அவை இன்னும் தளம்பல் நிலையிலே உள்ளன. இந்நிலைமையிலும் உறுதி ஏற்படக்கூடும்.

இவை போன்ற காரணிகள் உலகை பல்முனைத் தலைமைத்துவத்தை நோக்கி மேலும் உந்தித் தள்ளும். அதன்மூலம் உலக அதிகாரம் பிராந்தியங்களிடையே பகிரப்படுவதற்கான வாய்ப்புகள் வலுப்பெறும். அதன்மூலம் உலக வலுச்சமநிலை மீண்டும் படிப்படியாக உருவாகுவற்கான ஏதுநிலைமைகள் காணப்படுகின்றன. இதன்மூலம் அமெரிக்கா உலக நாடுகள் மீதான தனது இன்றைய ஏகபோகத்தை படிப்படிப்படியாக இழக்க நேரிடலாம். எனினும் பதவியிலுள்ள சாதாரண நபர்கூட அதைவிட்டுவிட ஒருபோதும் விரும்புவதில்லை. அவ்வாறெனில் அமெரிக்காவுக்கு அது எப்படியிருக்கும்? என்பதை ஊகிப்பது கடினமன்று. அந்தவகையில் அது உலகில் இன்னொருவகைப் போராட்டமாக மாறக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்பின் போர் வெற்றிப் பெருமிதம்!

## ஈரானின் போர் நிறுத்த நிபந்தனை சாத்தியமா?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

நாங்கள் வெற்றி பெற்றோம் என ஈரானுடனான போரில் ட்ரம்ப்பின் வெற்றி அறிவிப்புகள் யதார்த்தத்தை மீறுகின்றனவாகவே இருக்கின்றன. எப்போதும் அமெரிக்க ஜனாதிபதி தனது தவறுகளை அரிதாகவே ஒப்புக்கொள்வார். இம்முறையும் அதுவே நடந்துள்ளது. ஆனால் ஈரானுடன் தேவையற்ற போர் என சிஐஏ எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானுடனான போர் தொடங்கியதில் இருந்து ட்ரம்ப் வெளியிடும் செய்திகள் அனைத்தும் முரண்பாடகவே உள்ளது. அரசியல் பயணம் தொடங்கி அவரது ஆட்சியிலும் வாய்ச்சவாடல் எப்போதும் உண்மைக்கு புறம்பானதாகவே இருக்கும். ஈரான் மீதான அமெரிக்க தாக்குதலில் அவரது அணுகுமுறை இம்முறையும் வேறுபட்டதல்ல.

என்னதான் ட்ரம்ப் வெற்றிக் கொக்கரிப்பை கூவினாலும்,மத்திய கிழக்கு முழுவதும் ஈரான் புதிய தாக்குதல்களை நடத்தி வருகிறது.

எப்போதும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் வெற்றி பெறுவதாகச் சொல்லும் பழக்கம் கொண்டவர். அவர் பொருளாதாரம் பற்றி விவாதித்தாலும் சரி அல்லது சர்வதேச அரசியல் பற்றி விவாதித்தாலும் சரி, அடிப்படை உண்மைகள் மிகவும் நுணுக்கமாக இருந்தாலும் சரி, அவர் பெரும்பாலும் வெற்றியை அறிவிக்கும் வழக்கம் கொண்டவர் என்பது வெளிப்படை.

ஆனால் ஈரானுடனான நடந்து வரும் போரை "வெற்றி" என்று அவர் அடிக்கடி கூறுவது குறிப்பிடத்தக்க அபாயங்களை உருவாக்கி இருக்கிறது என பென்டகன் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோதலை நிர்வகிப்பது குறித்த பொது மக்களின் கருத்துக்கு மட்டுமல்ல, அவரது பரந்த இராஜதந்திர உத்திக்கும் இது பாரிய தோல்வியை விளைவுக்கும் சாத்தியங்கள் உள்ளன.

இந்த போரின் முதல் நாளிலேயே அமெரிக்கா வெற்றி பெற்றது என்று ட்ரம்ப் கூறியுள்ளார். ஈரானில் வான்வழித் தாக்குதல்கள் தொடங்கிய 12 நாட்களுக்குப் பிறகும் அதனையே ட்ரம்ப் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். "நாங்கள் வென்றோம். நாங்கள் பந்தயத்தில் வெற்றி பெற்றோம். முதல் ஒரு மணி நேரத்திலேயே ஈரான் முடிந்துவிட்டது" என ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் உலகளவில் நகைப்புக்கிடமாகி உள்ளது.

**வான் தாக்குதல்கள் தீவிரம்:**

அதேவேளை அமெரிக்க - இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ள நிலையில், ஈரான் வெளியிட்டுள்ள போர்நிறுத்த நிபந்தனைகள் வெறுமனே ஒரு பேச்சுவார்த்தை ஆவணமாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை போல் தெரிகிறது என ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

போரை நிறுத்த ஈரான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் ஒவ்வொன்றும் வளைகுடா நாடுகளின் அரசியல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெஹ்ரான் அரசின் முக்கிய போர் நிறுத்த நிபந்தனைகள் தொடர்பாக அரபு நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை இன்னும் தெரிவிக்கவில்லை. ஆனால் பல ஆசிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்துள்ளன.

**ஈரானின் பதில் தாக்குதல் வியூகம்:**

ஈரானின் பதில் தாக்குதல் என்பது போரை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வியூகத்தை பிரதிபலிக்கிறது. போரில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளை தோற்கடிக்க முயற்சிப்பதற்கு பதிலாக, ஈரான் மோதலை புவியியல் ரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் விரிவுபடுத்துவதாகத் தெரிகிறது.

ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் மட்டுமல்லாமல், ஈரான் அரசின் ஆதரவு பெற்ற குழுக்கள் பல்வேறு கட்ட தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக துப்பாக்கி ஏந்தியுள்ளது. அதே நேரத்தில் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற போராளி குழுக்கள் மேற்கத்திய ராணுவ நிலைகளை குறி வைத்து தகர்த்து வருகின்றன.

இந்த முறை ஈரான் கணிக்க முடியாத தாக்குதலை நம்பியிருப்பதை காட்டுவதாக சர்வதேச ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். போர்க்களத்தை விரிவுபடுத்துவதன் மூலம், எதிரிகளுக்கு அரசியல் மற்றும் பொருளாதார பேரிழப்புகளை ஏற்படுத்த முடியும் என ஈரான் நம்புகிறது.

**ஈரான் போர் நிறுத்த நிபந்தனை**

ஈரானின் போர் நிறுத்த நிபந்தனைகளாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும், இஸ்ரேல் தனது படைகளை அக்டோபர் 7-க்கு முந்தைய எல்லைகளுக்குத் திரும்பப் பெற வேண்டும் என்பன முக்கியமானவையாகும்.

அத்துடன் அரபு மண்ணில் உள்ள அனைத்து அமெரிக்க இராணுவ தளங்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இதுவரை விதிக்கப்பட்ட அனைத்து பொருளாதாரத் தடைகளுக்கும் ஈரான் இழப்பீடு பெற வேண்டும் மற்றும் அதிபர் ட்ரம்ப், ஈரானியத் தலைவரிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என ஈரான் அரசு வலியுறுத்தியுள்ளது.

மற்றொரு முக்கிய நிபந்தனையாக அதிபர் ட்ரம்ப்பின் காசா திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். ஈரான் மீதான அனைத்து பொருளாதாரத் தடைகளையும் நீக்கி, முடக்கப்பட்ட நிதியைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈரானின் அணுசக்தி உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். லெபனான், சிரியா மற்றும் ஏமன் நாடுகளிலிருந்து (வெளிநாட்டுப் படைகள்) வெளியேற வேண்டும். அதிபர் ட்ரம்ப், அயதுல்லா காமேனியிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஈரான் போர் நிறுத்த நிபந்தனைகளை விதித்துள்ளது.

அத்துடன் வளைகுடாவில் நீண்ட காலமாக பொருளாதார தடைகளை எதிர்த்து போராடிய ஈரான், இதுவரை விதிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளாதாரத் தடைக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது.

2026-ஆம் ஆண்டின் மார்ச் மாதம் உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக மாறியுள்ளது. இப்போது கட்டார் நாட்டில் உள்ள அமெரிக்காவின் அதிநவீன ரேடார் அமைப்புகளை ஈரான் செயலிழக்கச் செய்ததும், ஹார்முஸ் ஜலசந்தியை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததும் மத்திய கிழக்கின் அதிகார மையத்தையே மாற்றி அமைத்துள்ளது.

> ஈரான் போரின் முதல் நாளிலேயே அமெரிக்க வெற்றி பெற்றது என்று ட்ரம்ப் கூறியுள்ளார். ஈரானில் வான்வழித் தாக்குதல்கள் தொடங்கிய 12 நாட்களுக்குப் பிறகும் அதனையே ட்ரம்ப் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். "நாங்கள் வென்றோம். நாங்கள் பந்தயத்தில் வெற்றி பெற்றோம். முதல் ஒரு மணி நேரத்திலேயே ஈரான் முடிந்துவிட்டது" என ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் உலகளவில் நகைப்புக்கிடமாகி உள்ளது.



**ஈரான் வெல்ல முடியாத சக்தியா ?**

பொருளாதாரத் தடைகள், ஏவுகணைத் தாக்குதல்கள் என அனைத்தையும் தாண்டி, தற்போது தங்களை ஒரு "வெல்ல முடியாத சக்தியாக" அவர்கள் கருதுகிறார்கள். அத்துடன் அவர்கள் எதற்கும் துணிந்துவிட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. மேலும் அமெரிக்காவின் நவீன போர் தொழில்நுட்பங்களையே முடக்கிய பிறகு, அவர்களுக்கு இந்த நிபந்தனைகள் சாத்தியமற்றதாகத் தெரியவில்லை.

தற்போது உலகம் ஒரு விளிம்பில் நிற்கிறது. ஈரானின் இந்த நிபந்தனைகளை ஏற்றால், அது பல தசாப்தங்களாக நிலவி வந்த மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும். மறுபுறம், இதை நிராகரித்தால் உலகளாவிய எரிசக்தி விநியோகம் முடங்கி, உலகப் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும் அபாயம் உள்ளது.

ஈரான் இப்போது வெறும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அவர்கள் மேற்குலக நாடுகளின் கைகளை முறுக்கி தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வைக்கிறார்கள். மேற்குலகின் மிரட்டல் காலம் முடிந்துவிட்டது, இப்போது வளைகுடாவில் ஈரான் அரசியலை தீர்மானிக்கும் காலம் தொடங்கிவிட்டது என்றும் சில அரபு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிபந்தனைகளை அமெரிக்கா அப்படியே ஏற்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், இவற்றை முழுமையாக நிராகரிக்கவும் முடியாத ஒரு இக்கட்டான சூழலில் உலகம் இருக்கிறது.

**தேவையற்ற போரென சிஐஏ எச்சரிக்கை!**

சிஐஏ முன்னாள் இயக்குநர் ஈரான் மீது அமெரிக்க தாக்குதல் குறித்து மிகவும் கடுமையாக விமர்சித்துள்ளார். ஜோன் ஓ பிரன்னன், நடைபெறும் யுத்தம் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய தவறு என்றும், அமெரிக்கா இந்த நூற்றாண்டில் இரண்டு மிகப்பெரிய தவறுகளை செய்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஒன்று 2003 இல் நடைபெற்ற ஈராக் மீதான யுத்தம், மற்றொன்று இப்போது ஈரான் மீது நடத்தப்படும் தாக்குதல். அவரின் கருத்துப்படி, ஈராக் போரின் தவறை மீண்டும் அமெரிக்க செய்யும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த போர் தேவையற்றது, இந்த தாக்குதல் தேவையற்ற உயிரிழப்புகளை அதிகமாக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார். மேலும் ட்ரம்ப் அரசாங்கம் காரணங்களை உருவாக்குகிறது என்பது அவரின் குற்றச்சாட்டாகும். ஈரானால் உடனடி ஆபத்து இல்லை. ஆனாலும் போரை நியாயப்படுத்த அமெரிக்க நிர்வாகம் காரணங்களை உருவாக்குகிறது. இதுவே இஸ்ரேல் மேற்கொள்ளும் அரசியல் தாக்கம் காரணமாக அமெரிக்க தேவையற்ற போரை நடாத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு நீண்ட காலமாக ஈரான் மீது தாக்குதல் நடத்த விரும்பினார். அவர் ட்ரம்பை இந்தப் போர் நடவடிக்கைக்கு

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# “எங்கள் ஒவ்வொரு இரத்தத் துளிக்கும் பழி தீர்க்கப்படும்”- ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், மார்ச். 15

மத்திய கிழக்கில் அமெரிக்காவுடன் தொடர்புடைய அனைத்து எண்ணெய் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகளையும் தாக்கி அழிப்போம் எனவும் “நாங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் பழி தீர்க்கப்படும்” எனவும் ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் காரணமாக மத்திய கிழக்குப் பகுதியில் கடும் பதற்ற நிலை உருவாகியுள்ளது. இதற்கு பதிலடியாக ஈரானும் வளைகுடா நாடுகளை நோக்கி தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால், சர்வதேச அளவில் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் பாதிக்கப்படுகின்றன.

இந்த மோதல் காரணமாக உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள கடல் வழிப் போக்குவரத்து மற்றும் எண்ணெய் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படும் அபாயம் குறித்து சர்வதேச வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், ஈரானின் புதிய தலைவராகக் கருதப்படும் மொஜ்தபா கமெனியின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த ஈரான் தனது தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இதற்கு பதிலடியாக அமெரிக்காவும் இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், ஈரானின் மிக முக்கியமான தீவு நகரமாக விளங்கும் கார்க் தீவு மீது அமெரிக்கா சக்திவாய்ந்த குண்டு தாக்குதலை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், மத்திய கிழக்கில் அமெரிக்காவுடன் தொடர்புடைய அனைத்து எண்ணெய் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகளையும் தாக்கி அழிப்போம் என ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

“நாங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் பழி தீர்க்கப்படும்” என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மத்திய கிழக்கில் போர் சூழ்நிலை மேலும் மோசமடையும் அபாயம் நிலவுகிறது.

ஈரானின் மொத்த எண்ணெய் உற்பத்தியின் சுமார் 90 சதவீதம் கார்க் தீவு பகுதியிலிருந்தே நடைபெறுகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளதால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை மேலும் தீவிரமடைந்துள்ளதாக சர்வதேச அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் உலகளாவிய எண்ணெய் சந்தைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ஈரானுக்கு எதிரான போரில் இத்தாலி இனி பங்கேற்காது



ரோம், மார்ச். 15

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்னெடுக்கும் கூட்டு இராணுவ நடவடிக்கைகளுக்கு இத்தாலி இனி ஆதரவு வழங்காது என்று அந்த நாட்டின் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது, மத்திய கிழக்கிலிருந்து தனது நாட்டுப் படைகளை மீளப்பெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்குக்கு எதிரான போரில் இத்தாலி ஒருபோதும் பங்காளியாக இருக்காது எனவும், ஈரானுக்கு எதிரான போரில் இத்தாலி இனி பங்கேற்காது எனவும் அவர் கூறினார். (எ)

# கார்க் தீவில் அமெரிக்கா குண்டுவீச்சு! பதிலடி கொடுக்கத் தயாராகும் ஈரான்

தெஹ்ரான், மார்ச். 15

ஈரானின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையமாக கருதப்படும் கார்க் தீவு மீது அமெரிக்கா குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

கார்க் தீவிலுள்ள ஒவ்வொரு இராணுவ இலக்குகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது.

சுமார் 5 மைல் நீளம் கொண்ட இந்த சிறிய தீவு, ஈரான் கடற்கரையிலிருந்து 15 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளது.

கார்க் தீவு அந்த நாட்டின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையமாகக் கருதப்படுவதுடன், இது ஈரானின் “பெற்றோலிய உயிர்நாடி” என்றும் அழைக்கப்படுகிறது.

ஈரான் தனது கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 90 சதவீதத்தை இந்தத் தீவின் மூலமே முன்னெடுக்கின்றது.

அத்துடன், ஈரானின் மிகப் பெரிய எண்ணெய் கொள்வனவாளரான சீனா, இந்தத் தீவிலிருந்தே எண்ணெயைப் பெற்றுக் கொள்கிறது.

எனவே, கார்க் தீவு மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் ஈரானிய பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கார்க் தீவு மீதான தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கப் படைகள் கார்க் தீவின் இராணுவ இலக்குகளைத் தாக்கினாலும், எண்ணெய் ஏற்றுமதி மையங்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஹோர்முஸ் நீரிணை ஊடாகப் பயணிக்கும் எரிபொருள் கப்பல்கள் மீது ஈரானோ அல்லது வேறு தரப்பினரோ தாக்குதல் நடத்தினால், இந்தத் தீர்மானம் குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈரானின் எண்ணெய் மற்றும் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலுக்கும் பழிவாங்கும் நடவடிக்கையாக, அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் பிராந்தியத்திலுள்ள எண்ணெய் நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் பிரதான கச்சா எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவின் இராணுவ இலக்குகள் மீது நடத்தப்பட்ட அமெரிக்கத் தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈரானிய ஆயுதப் படைகளின் கூட்டு நடவடிக்கை கட்டளைப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மக்களை வெளியேற்றுவதற்கு முன் உரிய விசாரணை நடத்த வேண்டும்

## உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச். 15

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வசிக்கும் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ள திவுலபத்தான கிராம மக்களை வெளியேற்றுவதற்கு முன்னர், அது குறித்து முறையான விசாரணையை நடத்தி அவர்களுக்கு தகுந்த நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

குறித்த கிராம மக்களை வெளியேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பெங்கமுவே நாலக தேரர் மற்றும் கிராம மக்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் விகும் டி ஆப்ரூ இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்த மனு பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அங்கு விடயங்களை முன்வைத்த மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் விகும் டி ஆப்ரூ, இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தி கிராமத்தின் ஆரம்பகால குடியிருப்பாளர்களை அடையாளம் காணவும், அவர்களுக்கு மாற்று நிலங்களை வழங்க அல்லது இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனிஷ்க வித்தாரண, இந்த விசாரணை முடியும் வரை கிராமமக்கள் தற்போதுள்ள இடத்திலேயே தங்கியிருக்க அனுமதிக்குமாறும், அவர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிவாரணம் கிடைக்க வேண்டும் என்றும் நீதிமன்றில் கேட்டுக் கொண்டார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதியரசர்கள் குழாம், இரு தரப்பினரின் உடன்பாட்டுடன் மனு மீதான விசாரணையை நிறைவு செய்ய தீர்மானித்தது.

அத்துடன், முறையான விசாரணைக்குப் பின்னரும் உரிய நிவாரணம் கிடைக்காவிட்டால், இந்த வழக்கை ஒரு பிரேரணையின் ஊடாக மீண்டும் அழைக்க முடியும் எனவும் நீதியரசர்கள் குழாம் மனுதாரர் தரப்புக்கு அறிவித்தது. (எ)

## ட்ரம்பின்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இழுத்துள்ளார். இதனால் மத்திய கிழக்கு நிலைமை மேலும் மோசமாகும் என்பது அவரின் எச்சரிக்கையாகும்.

ஈரான் ஒரு பெரிய நாடும், 90 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இந்த போர் பல வருடங்களுக்கு நீடித்தால், பிராந்திய குழப்பத்தை உருவாக்கலாம். ஈரான் போர் ஒரு பெரிய அரசியல் தவறு.

இது 2003 ஈராக் போரின் போதான தவறுகளை மீண்டும் அமெரிக்கா செய்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த போர் தேவையற்றது. போருக்கான காரணங்கள் இஸ்ரேலிய அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்டவை. மத்திய கிழக்கில் நீண்டகாலக் குழப்பம் ஏற்படும் வகையில் இந்த போர் தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க தூதரகம் அருகில் ஈரான் ஏவுகணை தாக்குதல்

பாக்தாத், மார்ச். 15

ஈராக்கின் பாக்தாத்தில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரக வளாகத்திலுள்ள ஹெலிகொப்டர் தளத்தின் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈராக் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பல வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ள அதி உயர் பாதுகாப்பு வலயமான “கிரீன் சோன்” பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து, அமெரிக்கத் தூதரக வளாகத்துக்குள்ளிருந்து கரும்புகை வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்தத் தாக்குதல் அல்லது அதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து பாக்தாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்புகளையும் வெளியிடவில்லை. (எ)

## போர்க்காலம் ஒன்றில்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொந்த உள்நாட்டுப்போரின் விளைவான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கும் பிரயோகிக்க வேண்டும்.

மனிதாபிமானக் கோட்பாடுகளை உறுதிப்படுத்தி ஈரானிய கடற்படையினர் மற்றும் அவர்களது கப்பல் தொடர்பில் செயற்பட்டதன் மூலமாக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தார்மீகக் கலங்கரை விளக்கமாக இலங்கை வந்திருக்கிறது. புவிசார் அரசியல் பகைமைகள் தீவிரமடைந்து மனிதாபிமான நியமங்கள் அடிக்கடி அலட்சியம் செய்யப்படுகின்ற ஒரு நேரத்தில், இலங்கை முன்னெடுத்ததைப்போன்ற நடவடிக்கைள் அடையாள பூர்வ முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன.

உள்நாட்டிலும் அதேபோன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படக்கூடிய ஆற்றல் இருக்குமானால் வெளிநாட்டு விவகாரத்தில் எடுத்த தார்மீக நிலைப்பாட்டின் நம்பகத்தன்மை மேலும் மேம்படும். பொறுப்புக்கூறல், நீதி, இழப்பீடு மற்றும் நல்லிணக்கம் உட்பட உள்நாட்டுப் போரின் விளைவாகத் தோன்றிய தீர்வுகாணப் படாத பிரச்சினைகளுடன் இலங்கை தொடர்ந்து மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது. இலங்கைக்கு அதன் சொந்த குடிமக்கள் தொடர்பில் மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும் துன்பத்துக்குள்ளாகும் மனிதகுலம் தொடர்பிலும் கடமை ஒன்று இருக்கிறது. உள்நாட்டில் சொந்தப் பிரச்சினைகளுக்கு மானசீகமாக தீர்வுகளைக் காண்பது சர்வதேச சமூகத்தில் இலங்கையின் தார்மீக மதிப்பை வலுப்படுத்தும் என்பதுடன் புதிய சிறந்த ஒரு உலகத்துக்கான சக்தியாக மாறுவதற்கும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் உற்பத்தி...

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர், "போரால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக நான் பொறுப்பேற்றபோது, ஒன்றுமேயில்லாத அடிமட்டத்திலிருந்தே மாவட்டத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. அன்று மாவட்டச் செயலாளராக இருந்து என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன். வடக்கு மாகாணத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான, அதிக வளங்களைக் கொண்ட மாவட்டம் முல்லைத்தீவாகும். ஆனால், வறுமையின் பிடியிலும் இதுவே முதலிடத்தில் இருக்கின்றது. இதனை மாற்றியமைப்பதற்கு இவ்வாறான தொழில்முயற்சிகள் நிச்சயம் கைகொடுக்கும். இங்கு அதிகளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழும் நிலையில், அவர்களை வாழ்வாதார ரீதியில் உயர்த்திவிட வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. இதற்குப் பெரும் பங்களிப்புச் செய்யும் கனேடியத் தமிழர் பேரவைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்," என்றார்.

மேலும், குறித்த காணி ஒதுக்கீடு தொடர்பில் நினைவு கூர்ந்த ஆளுநர், "இந்த இடம் மிகவும் பொருத்தமானவர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மாவட்ட செயலாளராக நான் பணியாற்றிய காலத்திலேயே திருமுறிகண்டி ஆலயத்திற்கு அருகிலுள்ள இந்தக் காணியைச் சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கினேன். பின்னர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்குக் கையளிக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் இந்தக் காணிகளைப் பாதுகாத்துப் பொருத்தமானவர்களுக்கு வழங்குவதற்கு நாம் பாரிய சவால்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டோம். அந்த அதிகூடிய அழுத்தங்களுக்கு மத்தியில்தான் நாம் இந்தக் காணிகளைப் பாதுகாத்தோம் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்," எனத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பூரண ஒத்துழைப்புடனும், கனேடியத் தமிழர் பேரவையின் நிதியுதவியுடனும், வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பிலும் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விசேட நிகழ்வில், வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பிரதீபன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை, உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கனேடியத் தமிழர் பேரவையின் நிர்வாக இயக்குநர் டன்டன் துரைராஜா, கனேடியத் தமிழர் பேரவையின் மனிதாபிமானத் திட்டங்களின் ஒருங்கிணைப்பாளர் துஷ்யந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(அ)

## நாணய நிதிய..

கப்பட்ட நிதி வசதியின் கீழ், ஆறாவது தவணை நிதியை விடுவிப்பதற்கு முன்னதாக முன்னெடுக்கப்படும் மீளாய்வு கலந்துரையாடல்களில் இக்குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் இதுவரையில் ஐந்து தவணைகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த விஜயத்தின்போது, சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குறித்து விரிவாக மதிப்பாய்வு செய்யப்படவுள்ளது.

இந்த மீளாய்வு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஆறாவது தவணை நிதியை விடுவிப்பது தொடர்பான அவசியமான ஒப்பந்தங்கள் எட்டப்படும் என கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## ஈரானிய...

தொடர்ந்து ஏற்பட்டுள்ள தற்போதைய நிலவரங்கள் குறித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு ஈரானிய அமைச்சர் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி ஈரானிய டேனா போர்க்கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது, அதன் ஊழியர்களுக்கு உதவியமைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு அவர் தனது நன்றியினைத் தெரிவித்தார்.

குறிப்பாக, பாதிக்கப்பட்ட கப்பல் பணியாளர்களை மீட்பதற்கும், உயிரிழந்த 84 மாலுமிகளின் உடல்களை மீண்டும் ஈரானுக்குக் கொண்டு செல்வதற்கும் இலங்கை வழங்கிய ஒத்துழைப்புகளை ஈரானிய வெளிவிவகார அமைச்சர் வெகுவாகப் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இந்த உரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டதாக ஈரானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

## மின்சார...

பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசு நாட்டுக்குத் தரமற்ற நிலக்கரியையே இறக்குமதி செய்கின்றது என்பதை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பம் முதலே கூறி வருகின்றது. நுரைச்சோலை மின்நிலையத்தின் மூன்று இயந்திரங்கள் ஊடாக நேற்று 810 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 680 மெகாவோட் மாத்திரமே உற்பத்தியாகியுள்ளது. இந்த 130 மெகாவோட் தட்டுப்பாட்டுக்குத் தரமற்ற நிலக்கரி பயன்பாடே பிரதான காரணமாகும்.

தரமற்ற நிலக்கரியால் போதுமான மின்சாரம் உற்பத்தி செய்யப்படாத போது, அதனை ஈடுகட்ட எரிபொருள் மின்நிலையங்களிலிருந்து அதிக விலைக்கு மின்சாரம் பெறப்படுகின்றது. இந்த நட்டத்தை இறுதியில் மின்சார நுகர்வோரான பொதுமக்களே தாங்க வேண்டியுள்ளது.

இந்தத் தரமற்ற நிலக்கரியால் தற்போது மின்சாரத் துறையில் 'அவசர கொள்முதல்' நிலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. வியப்பூட்டும் விடயம் என்னவென்றால், இதுவரை தரமற்ற நிலக்கரியை விநியோகித்த அதே நிறுவனத்துக்கே மீண்டும் புதிய ஒப்பந்தங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது மிகவும் ஆபத்தான மற்றும் மோசடியான செயலாகும்.

வலுச்சக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாகும். ஆனால், தற்போது 'வலுச்சக்தி அபாயமே' காணப்படுகின்றது. தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதால் மின் உற்பத்தி உபகரணங்கள் சேதமடைவதுடன், சாம்பல் சதவீதம் அதிகரிப்பதால் மக்களின் உடல் நலத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அரச அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் நுரைச்சோலைக்கு விஜயம் செய்தபோது, மின் உற்பத்தி குறைவாக இருப்பதை நேரடியாகக் கண்டும், நிலக்கரியில் எந்தப் பிரச்சினையும் இல்லை என நாட்டுக்குப் பொய் உரைப்பது கண்டிக்கத்தக்கது.

மத்திய கிழக்கு போர்ச் சூழலால் சர்வதேச ரீதியில் எரிபொருள் விலை உயர்ந்துள்ள தருணத்தில், இவ்வாறான ஊழல்கள் நாட்டுக்கு இழைக்கப்படும் குற்றமாகும். முறைமை மாற்றம் பற்றிப் பேசிக்கொண்டு ஊழல், மோசடிகளையே அரசு முன்னெடுத்து வருகின்றது.

அதிக மின்சாரக் கட்டணத்தை அறவிட்டு, இந்த ஊழலின் சுமையை மக்கள் மீது சுமத்துவதற்காக மக்கள் இந்த அரசுக்கு ஆணையை வழங்கவில்லை- என்றார். (அ)

## போதை மாத்திரை...

ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தின் பின்புறத்தில், பாதுகாப்பு ஊழியர் அறைக்குப் பின்னால், தனியார் சுத்திகரிப்புச் சேவைப் பணியாளர் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவதை அவதானித்த பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கடமையிலிருந்த பாதுகாப்புப் பரிசோதகருக்கு விடயத்தைத் தெரியப்படுத்திய பின்னர் சந்தேக நபரை மறைந்திருந்து கண்காணித்துள்ளார்.

ஆள்கள் நடமாற்றமற்ற பகுதிக்குச் சென்ற சந்தேக நபர், தன் உடமையில் வைத்திருந்த தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை நுகர்ந்த வேளையில் மறைந்திருந்த பாதுகாப்பு ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரைப் பிடிக்க முற்பட்ட வேளையில், பாதுகாப்பு ஊழியர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் பாதுகாப்புபு ஊழியர் ஒருவர் காயமடைந்துள்ளார். எனினும், உடமையில் சந்தேகத்துக்கிடமான பொருளுடன் பிடிக்கப்பட்ட நபர் பல்கலைக்கழக நிர்வாகத்தினூடாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஏற்கனவே வேறொரு போதைப் பொருள் வழக்கில் தண்டணை அனுபவித்த பின்னர் அண்மையிலேயே சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேக நபரை ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ)

## யாழ்.பல்கலை...

இசைத்துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய அமரர் சங்கீதபூசணம் கலாநிதி ந.வி. மு.நவரத்தினம் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சைவமும், தமிழும் தளைத்தோங்க அரும்பணியாற்றிய இவர் தமிழ் இசைத் துறையில், திருமுறைப் பாராயணங்கள், தமிழிசை வளர்ச்சியில் அரும் பங்காற்றியிருந்தார்.

இவர் யாழ்.பல்கலைக்கழக, சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்து இசைத்துறையின் தற்போதைய விரிவுரையாளர்களான ந.பரந்தாமன், கலாநிதி அ.ஸ்ரீநாகபூசணி ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நாளை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ)

## 3 முதல் 5 வயது...

திறன்கள் மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனையைப் பாதிப்பதோடு, சிறுவயதுக் கற்றல் என்பது செயல்பாடுகள் மற்றும் சமூக இடைவினைகள் சார்ந்தே அமைய வேண்டும் என்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினி மற்றும் தொலைபேசி போன்ற தொடுதிரை "ஸ்மார்ட்" கருவிகளைப் பாவிப்பதால், சிறுவர்களின் கண் பார்வை மற்றும் மூளை வளர்ச்சிக்குத் தீங்கு ஏற்படுவதோடு அது, இயற்கையான உடல் மற்றும் மன வளர்ச்சியையும் பாதிக்கும். வணிக நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் இவ்வாறான இணையவழி வகுப்புகள் சிறுவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தாது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஒரு பிள்ளைக்குச் சிறந்த ஆசிரியர்களே தேவை, பிள்ளைகளோடு ஊடாடி அவர்கள் வாழும் சூழலுக்கேற்றவாறு அவர்களை நேரடியாக வழிப்படுத்தும் ஆசிரியர்களினூடாகப் பெறப்படும் அனுபவக் கல்வியே பிள்ளைகளை வளப்படுத்தும் என்பதால், சிறுவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வாறான இணையவழி நிகழ்நிலைக் கற்றல் செயல்பாடுகளைத் தவிர்க்குமாறு பெற்றோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஒ)

## எதிர்கட்சிகளை...

நடத்தப்படும் விசேட மக்கள் சந்திப்புகளின் முதற்கட்டம் நேற்று சனிக்கிழமை காலை காலியில் ஆரம்பமானது.

கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நாட்டின் தற்போதைய நிலைவரம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போதைய அரசு தனது கட்சித் தலைமையகத்தின் ஊடாக எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தும் நோக்கில், ரணில் விக்கிரமசிங்கவை நேரடியாகத் தாக்கி வருவதை அனைவரும் அறிவர். ஒரு தேசியத் தலைவராக அவர் நாட்டுக்காக ஆற்றிய சேவையை இன்று சிலர் மறந்திருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டின் தொழில்முயற்சி மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் அவரே. பியகம, சீதாவக்க, சப்புகஸ்கந்த, பிங்கிரிய, கொக்கல மற்றும் பல்லேகலை ஆகிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்கு அவரே முன்னோடியாகத் திகழ்ந்தார். 1991 ஆம் ஆண்டிலேயே ஹோட்டல்களுக்கான சலுகைகளை வழங்கவும், "இன்போ லங்கா" கண்காட்சியைத் தொடங்கவும் அவர் நடவடிக்கை எடுத்தார்.

2001 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்து மறைப் பெறுமானத்தில் இருந்தபோது, அதனை மீண்டும் கட்டியெழுப்பியவர் ரணில் விக்கிரமசிங்கவே. 2003 இல் டோக்கியோ உதவி மாநாட்டின் ஊடாக "மீண்டெழும் ஸ்ரீலங்கா" திட்டத்துக்காக சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாயைப் பெற்றுத் தந்தார். அன்று நாடெங்கும் நிலவிய மின்வெட்டை முழுமையாக நீக்கி, 24 மணிநேர மின்சாரத்தை உறுதிப்படுத்தியதும் அவரது அரசே ஆகும்.

2022 முதல் 2024 வரையான காலப்பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைச் சந்தித்தபோது, எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துப் பொருள்களுக்காக மக்கள் வரிசைகளில் உயிரிழந்த இருண்ட காலத்தை மாற்றியமைத்தவர் அவரே. சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி, வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மீட்டெடுத்ததோடு, நிச்சயமற்றிருந்த மக்கள் வாழ்வை இயல்பு நிலைக்கும் அவர் கொண்டு வந்தார்.

இந்து சமுத்திர மாநாடுகளில் பிராந்தியத்தின் எதிர்காலம் குறித்து அவர் முன்வைத்த கருத்துக்கள் இன்றும் சர்வதேச அளவில் போற்றப்படுகின்றன. உலகத் தலைவர்களுடன் அவர் கொண்டுள்ள நெருக்கமான உறவு நாட்டுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வாறானதொரு வரலாற்றுச் சிறப்புமிக்க சேவையை ஆற்றிய ஒரு தலைவரின் அறிவையும் அனுபவத்தையும் நாட்டுக்காகப் பயன்படுத்தாமல், அவரைச் சிறையிலடைக்க முயற்சிப்பது தற்போதைய ஆட்சியாளர்களின் பலவீனத்தையே காட்டுகின்றது."

- என்றார். (அ)

## அரச ஊழியர்களுக்கு...

இலங்கையிலும் கடந்த கொரோனா தொற்றுக் காலத்தில் வீட்டிலிருந்தே பணியாற்றும் முறை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக உலகளவில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அண்மையில் இலங்கையில் எரிபொருள் விலைகள் கணிசமாக உயர்த்தப்பட்டன.

எரிபொருள் விநியோகத்தில் தொடர்ந்தும் தடைகள் ஏற்படும் பட்சத்தில், விலைகளை மீண்டும் அதிகரிக்க வேண்டிய சூழல் உருவாகலாம் எனத் தாது எண்ணெய் கூட்டுத்தாபன அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

எரிசக்தி நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு கட்டமாக, எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு மீண்டும் "கியூ.ஆர்." குறியீட்டு முறையை அறிமுகப்படுத்துவது குறித்தும் அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் ஆதரவை பெற்ற அநுரகுமார மாகாண தேர்தலை நடத்தாதமை ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் மனோ கணேசன்



கொழும்பு, மார்ச் 15

"மகிந்த ராஜபக்ஷவே போரை முன்னெடுத்தார். இதனால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் அவர் தொடர்பில் கடும் விமர்சனம் இருந்தது. தம்மை மக்கள் விமர்சித்தபோதிலும் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுத்தார். எனினும், வடக்கு மக்களின் ஆதரவை பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தலை நடத்தாமல் இருப்பது ஏன்? எனது கேள்வி சரிதானே?"

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

"ஜனாதிபதி வடக்குக்கு செல்கின்றார். சுதந்திரமாக நடக்கின்றார். செல்பி எடுக்கின்றார். இது நல்ல விடயம். இதில் எவ்வித தவறும் கிடையாது.

இப்படி மக்கள் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதியால் ஏன் தேர்தலை நடத்த முடியாதுள்ளது." என்றார் மனோ கணேசன்.

"மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையின்கீழ் நடத்துவதற்குரிய யோசனைக்கு நாம் ஆதரவளித்தோம். எதிரணியில் இருக்கும்போது தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அதற்கு ஆதரவளித்தார்.

எனினும், தற்போது அவர்களின் நிலைப்பாடு மாறியுள்ளது. இதற்கான காரணம் தெரியவில்லை.

மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையின்கீழ் நடத்துவதற்குரிய தனிநபர் சட்டமூலம் உள்ளது. அதனை அரசாங்கம் தமது சட்டமூலமாக கொண்டுவர வேண்டும். இதற்குரிய கோரிக்கையை நாம் முன்வைப்போம்." - என்றார் மனோ கணேசன்.

(அ)

# நாக விகாரையில் வழிபட்டது ஐக்கிய மக்கள் சக்தியின் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் குழுவினர் நேற்று முன் தினம் ஆரியகுளம் நாக விகாரைக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண, யாழ்.மாவட்ட அமைப்பாளர் அருந்தவநாதன் அனோஜன் உள்ளிட்ட தொகுதி அமைப்பாளர்கள் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டதுடன் விகாராதிபதி மீகஹஜந்துரே சிறி விமல தேரருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (அ)



### மத்திய கிழக்கு போர்ப் பதற்றம்

# எண்ணெய்க் கப்பல்களை காக்கத் துடிக்கும் நாடுகள்!

கொழும்பு, மார்ச் 15

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலுக்கு மத்தியில், ஹோர்முஸ் நீரிணை ஊடாகத் தமது கப்பல்கள் பாதுகாப்பாகப் பயணிப்பதை உறுதிப்படுத்துவதற்காக பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஈரானுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக 'பினான்சியல் ரைம்ஸ்' செய்தியை மேற்கோள் காட்டி அல்ஜெஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கிலிருந்து மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதியை மீள ஆரம்பிக்கும் நோக்கில் ஐரோப்பிய நாடுகள் இந்த முயற்சியை எடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தைகள் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹோர்முஸ் நீரிணையில் பாதுகாப்பு நிலைமை சீரடைந்தவுடன், அங்கு கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக பிரான்ஸ் ஒரு விசேட கூட்டணியை உருவாக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீரிணை ஊடாகச் செல்லும் எண்ணெய் கப்பல்களுக்குப் பாதுகாப்பாகப் போர் கப்பல்களை அனுப்பும் திட்டம் குறித்து ஐரோப்பிய, ஆசிய மற்றும் வளைகுடா நாடுகளுடன் பிரான்ஸ் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

(அ)

# நாட்டில் எரிபொருள்கள் விநியோகம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்!

## லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

இலங்கையின் வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும், அதற்காக எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்த அந்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே.ரகு இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் என்ற ரீதியில், எரிபொருள் விநியோகத்தை நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்போம் என்பதை மக்களுக்கு கூற விரும்புகிறேன். நாட்டிற்கு மிகவும் அவசியமான வலுசக்தி பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

தற்போதைய நிலைமை மிகவும் சிறப்பாக இருப்பதாக நான் கூறவில்லை. எவ்வாறாயினும், நாட்டுக்குள் எரிபொருள் விநியோகத்தை சீராகப் பேணுவதற்காக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் அரசாங்கமும் தங்களால் இயன்ற உச்சகட்ட முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்காக நாங்கள் தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிப்போம் - என்றார். (அ)

# விமான எரிபொருள் விலை உயர்வால் பயணக் கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 15

விமான எரிபொருள் விலையும் பாரியளவில் உயர்ந்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் வானூர்தி போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நெருக்கடி காரணமாக உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்ததை அடுத்தே, இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக ஒரு கலன் 2.25 அமெரிக்க டொலராக இருந்த விமான எரிபொருளின் விலை, தற்போது 4 டொலரைத் கடந்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

இந்த விலையேற்றம் விமான பயணச்சீட்டுகளின் விலையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். எரிபொருள் விலை அதிகரித்தபோதிலும், முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகளுக்கான கட்டணங்களில் எந்த வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

எனினும், புதிதாகப் பதிவு செய்யப்படும் பயணச்சீட்டுகளுக்கு அன்றைய சந்தை விலைக்கு ஏற்பவே கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# வெப்பநிலை உச்சம்!

கொழும்பு, மார்ச் 15

நாட்டின் 15 மாவட்டங்களுக்கு வெப்பநிலை தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, தென், வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மனித உடலில் உணரப்படும் வெப்பச் சுட்டெண் 39 பாகை செல்சியஸ் முதல் 45 பாகை செல்சியஸ் வரை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெப்பநிலை அதிகரித்து வரும் நிலையில் அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் வெப்ப அழுத்தத்தினால் பாதிக்கக் கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் முடிந்த வரை நீர் அல்லது பொருத்தமான திரவ ஆகாரங்களை அருந்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதிக நேரம் வெயிலில் இருப்பதை தவிர்க் குமாறும் முடிந்த வரை நிழலான இடங்களில் இருக்கு மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# மத்திய கிழக்கு பிராந்திய போரால் நிலக்கரி விநியோகத்திலும் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 15

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் போர் பதற்றம், இலங்கையின் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி விநியோகத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இதனால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்த கவலை எழுந்துள்ளது.

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்கான 25 நிலக்கரி கப்பல்களில், ஏற்கனவே தரம் குறைந்த நிலக்கரியை கொண்டு வந்த 12 கப்பல்கள் சர்ச்சைக்குள்ளாகியுள்ளன.

இந்தநிலையில், வளைகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச கடல் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, மீதமுள்ள நிலக்கரியை விநியோகிக்க மே மாதம் 10ஆம் திகதி வரை கூடுதல் கால அவகாசம் வழங்குமாறு விநியோகத்தர்கள் கோரியுள்ளனர். சுமார் 900 மெகாவாட் உற் பத்தித் திறன் கொண்ட நுரைச்சோலை மின் நிலையம், நாட்டின் மின்சாரத் தேவையில் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த விநியோகத் தாமதம் தேசிய மின் கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என அச்சம் வெளி யிடப்பட்டுள்ளது.(அ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org